Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 05 ஞாயிற்றுக்கிழமை (21.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 355

## பளையிலிருந்து யாழ்ப்பாணம்வரை புகையிரத பரீட்சார்த்த வெள்ளோட்டம்

### மக்களை அவதானமாக இருக்க அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

பளையிலிருந்து யாழ்ப்பாணம்வரை புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புகையிரதப் பாதையில் புகையிரத பரீட்சார்த்த வெள்ளோட்டம் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளதால் பொதுமக்களை அவதானமாக செயற்படுமாறு புகையிரத திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இப்புகையிரப் பாதையில் பரீட்சார்த்த ரீதியான அதிவேகமான புகையிரதப் போக்கு வரத்து மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே பொது மக்கள் புகையிரதக் கடவைகளைக் கடக்கும் போதும் புகையிரதப்பாதையின் அருகில் செல்லும் போதும் இதனைக் கருத்தில் கொள்வதுடன், தங்கள் கால் நடைகளின் நடமாட்டத்தை புகையிரதப்பாதைக்கருகில் கட்டுப்படுத்தும்படியும் புகையிரத திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## தமிழ்த்தலைமைகளின் தவறுகளே தமிழரின் பின்னடைவிற்கு காரணம்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(லண்டன்)

தமிழ்த்தலைமைகளின் தவறான அணுகுமுறையே தமிழ் மக்களின் பின்னடைவிற்கு காரணமென பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.


பொதுவாக பிரச்சினைகள் நாட்டுக்கு நாடு வேறுபட்டதாகும். அந்தந்த சூழலுக்கு ஏற்ற வகையிலேயே நாங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். சில சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகளின் உசுப்பேத்தலுக்கு மக்கள் எடுபட்டு சாதகமாக வாக்களிப்பதுண்டு. சில சந்தர்ப்பங்களில் மக்கள் அதைப் புரிந்து கொண்டு விழிப்புணர்வோடு உணர்ச்சிக் கோசங்களுக்கு எடுபடாமல் எதிர்த்து வாக்களிப்பதுண்டு என ஐக்கிய ராஜ்ஜியத்திலிருந்து பிரிந்து செல்வது தொடர்பாக மக்கள் கருத்தறிய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பிரிவினைக்கு எதிராக ஸ்கொட்லாந்து மக்கள் வாக்களித்துள்ளனர். இதே போல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கும் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் எவ்வாறான வெளிப்பாடு கிடைக்கும் என்று பி.பி.சி கேட்ட போது பதிலளித்த அமைச்சர்.

ஸ்கொட்லாந்தில் பெரும்பான்மையான மக்கள் அங்கிருக்

(19) ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை அரசியலமைப்பின் படியே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு

### ஜனாதிபதியிடம் எடுத்துரைத்த பா.ஜ.க.தலைவர்கள்



(கொழும்பு)

நீண்டகாலமாக தீர்க்கப்படாமலுள்ள இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு இலங்கையின் அரசியல் சாசன விதிகளுக்கு உட்பட்டு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதனையே இந்தியா விரும்புவதாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாரதிய ஜனதாக்கட்சியின் தேசிய செயலாளர் பி.முரளிதர்ராவ் மற்றும் வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான விஜய் ஜாலி இருவரும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற ஆசிய அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்கேற்க கொழும்பு வந்த இருவரும் நேற்றையதினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவரது வாசஸ்தலத்தில்சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

சுமார் 45 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது இருதரப்பு உறவுகள், மற்றும் இலங்கைப் பிரச்சினைகள் குறித்து விரிவாகப் பேசினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வெளிவிவகார அமைசசர் ஜீ.எல். பீரிஸைச் சந்தித்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஊவா மாகாணசபைத்தேர்தல் அறுபது வீத வாக்களிப்பு

### வன்முறைகள் பெருமளவில் குறைவு

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற ஊவா மாகாண சபைக்கான வாக்களிப்பில் 60 வீதத்திற்கும் அதிகமான வாக்களிப்பு இடம்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. இந்த வாக்களிப்பில் வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்படி நேற்று மாலை 4 மணியுடன் நிறைவடைந்த வாக்களிப்பில் மொனராகல மாவட்டத்தில் 62 சதவீதமும் பதுளையில் 60 சதவீத வாக்குப்பதிவும் இடம்பெற்றுள்ளன.

தேர்தல்கள் செயலக தகவலின்படி 834 வாக்களிப்பு நிலையங்களிலும் சுமுகமான முறையில் வாக்களிப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றைய தினம் தேர்தல் வன்முறைச்சம்பவங்களாக 91 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் 10 வன்முறைச்சம்பவங்கள், 38 சட்டவிரோதபிரசார நடவடிக்கைகள் மற்றும் வாக்கா

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் ஆயுதங்களை அழித்தது இந்தியா

தமிழகத்தின் நாகப்பட்டினம் காவல்துறையினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை அழித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1985ஆம் ஆண்டு மீட்கப்பட்ட ஆயுதங்களே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் வேதாரணியம் மற்றும் கோடிக்கரை ஆகிய பகுதிகளின் கரையோரங்களிலிருந்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தன.

250 கைக்குண்டுகளும், 166

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியையின் "பூவாசு" தாக்குதல் மாணவியின் மண்டை உடைந்தது

### கிளிநொச்சி நகரில் சம்பவம்

கிளிநொச்சி நகரில் ஏ9 வீதியில் அமைந்துள்ள ஆரம்ப வித்தியாலயம் ஒன்றில் கடந்த புதன் கிழமை தரம் ஐந்து ஏ, பிரிவில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு ஆசிரியை ஒருவர் முதிரைப் பலகையினால் செய்யப்பட்ட பூவாசு ஒன்றினால் எறிந்து தாக்கியதில் மாணவி தலையில் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மூன்று தையல் போடப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கடந்த புதன்கிழமை வகுப்பறையில் விளையாடிய மாணவியை

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் இராணுவ ஆட்சி; அச்சம் கொள்ளும் சந்திரிகா

இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

'அத்த' பத்திரிகைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டில் வீதிகளைக் கூட்டிச் சுத்தம் செய்யும் பணிகளைக் கூட இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது வீட்டுக்கு எதிரில் காணப்படும் கழிவுக் வாய்க்கால்களையும் இராணுவத்தினரே சுத்தம் செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களுக்கு பதிலாக கைகளில் தும்புத்தடிகளை எடுத்துள்ள படையினர் நாட்டுக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய அபாயம் காணப்படுவதாக தாம் அஞ்சுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமது வீட்டின் முன்னால்

(19) ஆம் பக்கம் பார்க்க

### – புலிகளின் சின்னம் பொறித்த –

## கழுத்துப்பட்டி அணிந்திருந்த கிளி.கூரப்பந்தாட்ட பயிற்றுநர் கைது

விடுதலைப்புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட கழுத்துப்பட்டியை அணிந்து போட்டி நிகழ்வில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட பயிற்றுநர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற 'வடமாகாணகரப்பந்தாட்ட போட்டி

(19) ஆம் பக்கம் பார்க்க



# காரைநகரிலும் வறட்சி நிவாரணம்



பாரம்[illegible] கைத்தொழில்கள் மற்றும் [illegible] முயற்சி அபிவிருத்[illegible] அமைச்சரின் பணிப்புரைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் நேற்றுக் காலை 9 மணிக்கு வறட்சி நிவாரணமாக உருளைக்கிழங்கு விநியோகம் காரைநகரில் இடம்பெற்றது.

ஒருகுடும்பத்திற்கு 5 கிலோ வீதம் 2800 பயனாளிகளுக்கு, காரைநகர்ப் பிரதேச ஒருங் கிணைப்புக் குழு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.யோகேந் திரன்தலைமையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் காரைநகர் ஒருங்கிணைப்பாள ரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளரும் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவருமான வீகண் ணனினால் ( றஜனி தோழர் ) காரைநகர் பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைமைச் செயல கத்தில் இவ் விநியோகம் தொடங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் காரைநகர் பிரதேச செயலகத்தின் பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்களும், வாழ் வின் எழிச்சித் திணைக்கள உத்தியோகத்தர்களும்,கிராம சேவையாளர்களும், பலநோக்குக கூட்டுறவுச்சங்க பொதுமுகாமை யாளர் மற்றும் பணியாளர்களும் பங்குகொண்டனர்.

# 500 தமிழ் இளைஞர், யுவதிகள் இராணுவ சேவையில் இணைப்பு

## நேற்று கோலாகல விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட 500 தமிழ் இளைஞர், யுவதிகள் நான்கு மாதப் பயிற்சியை நிறைவு செய்து நேற்று சேவையில் இணைத் துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இது குறித்து இராணுவ வீர வீராங்கனைகளின் அணிவகுப்பு மரியாதை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.காங்கேசன்துறை படைத்தளத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் பிரதித்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அம்பன் பொல பிரதம அதிதியா கக் கலந்துகொண்டு புதிதாக இராணுவத்தில் இருந்து வெளி யேறும் தமிழ் இளைஞர் யுவதிக ளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். மேலும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங் கோவன், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் படை அதிகாரிளும் அதிதிக ளாகக் கலந்துகொண்டனர்.



பயிற்சியை முடித்து வெளியே றும் படையினருக்கான சான்றி தழ்களை யாழ்.மாவட்டக் கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங் கோவன், யாழ்.மாவட்ட அர சாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் மற்றும் கடற்படை அதிகாரி ஆகியோர் பயிற்சியை முடித்து வெளியேறும் இராணுவ வீரர்களின் பெற்றோரிடம் வழங்கினர். தொடர்ந்து பயிற் சியை முடித்து வெளியேறிய இராணுவத்தினரால் அணி வகுப்பு மரியாதை இலங்கை இராணுவத்தின் பிரதித்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அம்பம் பொல ஏற்றுக் கொண் டார். தொடர்ந்து இராணுவ வீரர்கள், பொலிஸாரின் சாகச நிகழ்வுகள் இடம்பெற்றன.

மோப்பநாய்களின் மூலம் நிகழ்த்தப்படும் சாகசநிகழ்வுகள், இராணுவ பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் சாகச நிகழ் வின் இராணுவ பொறியியல் படையினரது சாகச நிகழ்வுகள் என்பன இடம்பெற்றது.

மேலும் பயிற்சியை முடித்து வெளியேறிய இராணுவ வீரர்க ளுக்கான பிறந்த உடன்திறன் வெளிப்பாட்டிற்குரிய கேடயங் களும் இலங்கை இராணுவத்தின பதில் தலைமை அதிகாரியினால் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் புதிதாக பயிற்சியை முடித்து வெளியே றிய இராணுவ வீரவீராங்க னைகளின் பெற்றோர், உறவி னர்கள் சர்வமதத்தலைவர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கிராம சேவகர்கள் எனப் கலந்து கொண்டனர்.

இலங்கை இராணுவத்தின் மகளிர் படையணிக்கு 100 பேரும் பொதுச் சேவைப் படையணிக்கு 200 பேரும் மின்னியல் பிரிவிற்கு 100 பேரும் பொறியியில் சேவைக்கும் 100 பேரும் இவ்வாறாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். (25,பா)


## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3727)

## வாழ்க வளமுடன்

பெயர் : இன்பன் கஷ்மி
முகவரி : 669/7 ஆம் யுனிட்
கல்மடு நகர்

அகவை 3 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்





அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 292 |
| திகதி - | 2014.09.19 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

07 31 38 56 J

பரிசுத் தொகை ரூபா. 13,585,720/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 08 | 400,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 215 | 215,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 390 | 390,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9674 | 580,440/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5111 | 204,440/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 126610 | 2,532,200/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18322 | 366,440/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 13,585,720/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,688,520/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 13,833,540/-

2014.09.23ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3503)


# யாழ்.நகரில் இன்று சமாதான விழிப்புணர்வுப் பேரணி

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தையும் நல்லி ணக்கத்தையும் வலியுறுத்தும் சமாதானப் பேரணி ஒன்று யாழ்.நகரில் இன்று இடம்பெற வுள்ளது.

சர்வதேச சமாதானத்தை முன் னிட்டு இந்த சமாதானப் பேரணி இடம்பெறவுள்ளது. இந்தச் சமா தானப் பேரணிக்கான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

இன்று காலை யாழ்.நகரில் உள்ள மகாத்மாகாந்தி வீதியி லிருந்து ஆரம்பமாகும் இந்த சமாதானப் பேரணி மருத்துவ மனை வீதி மற்றும் காங்கேசன் துறை வீதியூடாக யாழ்.துரை யப்பா விளையாட்டு அரங்கைச் சென்றடையும்.

இப்பேரணி ஊடாக மக்கள் மத்தியில் சமாதானம் தொடர் பான விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட வுள்ளது.

(க)

# வயோதிபரின் சடலம் மீட்பு

வரணி வெங்கிராயன் கண்டல் காட்டுப் பகுதியில் வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் மு.ப 11 மணிக்கு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வரணி குடமியன் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சின் னையா (வயது 63) என்பவரே நேற்று சடலமாக மீட்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை இரவு குறித்த நபர் காணா மற் போயுள்ளதாகவும் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணி யளவில் வயோதிபர் இறந்து கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வயோதிபர் வீட்டில் ஏற்பட்ட மனக் கசப்பின் காரணமாக கோபமடைந்து வெளியில் சென்றதாகவும் இவரைக் காணாது உறவினர்கள் தேடிச் சென்ற போது வெங்கிராயன் கண்டல் காட்டுப் பகுதியில் நஞ்சு அருந்திய நிலையில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது. (14)

# வீதி ஒழுங்கை கடைப்பிடிக்காத பாதசாரிகளால்·விபத்து

வீதிகளில் பாதசாரிகள் கடவைகள் இருந்தும் அக் கடவைகளில் இருந்து 10 மீற்றர் 20 மீற்றர் தூரங்களுக்கு அப்பால் பாதசாரிகள் வீதியைக் கடப்பதால் காங்கேசன்துறை வீதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக மருதனார் மடம் சந்திப் பில் 200 மீற்றர் தூர இடைவெளிகளில் 3 பாதசாரிகள் கடவைகள் இருந்தும் அவற்றை அலட்சியம் செய்துவிட்டு தாம் விரும்பிய இடங்களில் மாணவர்கள் பொதுமக்கள் வீதியை கடப்பதால் விபத் துககள் தொடர்ந்த வண்ணம் உள்ளன எனவே சரியான வழிகாட்டல்கள் இல்லாமையாலேயே இவ்வாறான செயற்பாடுகள் வீதியில் நடைபெறுவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

உரியவர்கள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (66)

# 37 வருடசேவைக்காலத்தில் சமுதாய உயர்ச்சிக்கு உழைத்தவர்

## பேராசிரியர் தேவராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது சமுதாயத்தின் வளர்ச்சி, அபிவிருத்திக்காகவும் கல்விப் பணிக்காகவும், அதிபர், ஆசிரியர்களது சேவைகளின் உயர்ச்சிக்காகவும் பல சவால்களுக்கு முன் நேர் கணியமாக சிந்தித்து செயலாற்றிய செயல் வீரர்களில் பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்தன் என்றால் மிகையாகாது என பேராசிரியர் க.தேவராஜா தெரிவித்துள்ளார்.

கல்விப் பணியில் 37 ஆண்டுகள் பூர்த்தி செய்து விக்ரோரியாக் கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற முதல்வர் பிரம்மஸ்ரீ வாசுதேவக் குருக்கள் "ஸ்ரீகாந்தம்" மலர் வெளியீட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றது.

அதிபர் திருமதி ச.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த 37 ஆண்டுகள் ஓட்டப்பந்தயத்தில் ஸ்ரீகாந்தன் முயலாகவும் ஆமையாகவும் ஓடி வெற்றிபெற்று சமூகத்தின் உயர்ச்சிக்கு வலுச்சேர்த்த பெரும் மனிதராவார். இவர் வடமாகாணத்தின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் என்றும் போற்றப்படுபவர். அவரது சிறப்பை எடுத்தியம்பும் வகையில் 'ஸ்ரீகாந்தம்' நூல் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன் என்றார். (92)

# அரைக்கும் ஆலை அமைக்க பாலியாற்றில் அடிக்கல் நாட்டல்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலியாறு கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு அரைக்கும் ஆலை அமைப்பதற்கு கடந்த வியாழக்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டது.

இக்கிராம அபிவிருத்தியை கருத்திற்கொண்டு வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் இத்திட்டத்துக்காக 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கிராமம் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டமையால் அரைக்கும் ஆலை அமைப்பதன் மூலம் சிறந்த பயனடையமுடியும் என்பது தொடர்பில், வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சருக்கு தெரியப்படுத்தியதன் அடிப்படையில் இந்த ஆலைக்கான நிதி ஒதுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.வரப்பிரகாசம், அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கண்ணகை புரத்துக்கு குடிநீர் விநியோகம்

(வரணி)

வரணி வடக்கு சிமிழ் கண்ணகை புரத்து மக்களுக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் ஏற்பாட்டில் 1000 லீற்றர் கொள்கலனில் சிறிகணேசா சனசமூக நிலையத்தருகில் வைத்து குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

இப்பகுதி மக்கள் இதுவரை காலமும் சுமார் அரை மைல் தூரம் சென்று சங்கத்தானை கிணற்று நீரைப் பயன்படுத்தி வந்தனர். தற்போது இக் கிணற்று நீர் வற்றிய நிலையில் இந்த குடிநீர் விநியோகம் கண்ணகை புர மக்களுக்கு பெரும் நன்மை அளித்துள்ளதாக அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (150)


# வாள்வெட்டு சம்பவத்தில் காவலாளி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள இராசன் மரத் தளபாட விற்பனை நிலையத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11 மணிக்கு வாள்களுடன் சைக்கிள்களில் வந்த 04 பேர் விற்பனை நிலையத்தின் வாயிற்கதவை வாளால் கொத்தியதாகவும் உள்ளே இருப்பவர்களை வெளியே வரும்படி சத்தமிட்டு கத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தின் போது எவரும் வெளியில் வராதமையால் அங்கு காவலாளியாக பணி புரிந்து வந்த சாரங்கபாணி கேசவன் (வயது 65) என்பவரை வாளால் வெட்டி காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த காவலாளி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




என்னதான் நடந்து கொண்டிருக்குது... இஞ்ச...

மாவையற்றை புலம்பலைச் சகிக்கிறதுக்கும் ஒரு அளவிருக்கு.

'இந்த மண்ணில தமிழீழத்தைக் காணுவம்' எண்டு ஒரு முழக்கம்.

'நாங்கள் பாண்டவர்கள். அநீதிக்கு எதிராகப் போராடி நீதியை நிலைநாட்டுவோம்' எண்டொரு சபதம். (பாண்டவர்கள் எண்டு கூட்டமைப்பில இருக்கிற அஞ்சு கட்சித் தலைவர்களையுமா சொல்லுறார் மாவை? மூத்தவர் சங்கரியைத்தான் கழட்டி விட்டாச்சே... பாண்டவரில மூத்தவர் தருமரெல்லோ... அப்ப தருமரை விட்டிட்டுப் பாண்டவர் போராட்டமா... அருச்சுனன் ஆர் மாவையரா... என்னடா இது தமிழருக்கு வந்த சோதினை...!!)

தமிழரசுக் கட்சியின்ரை வவுனியா மாநாட்டில கதாப்பிரசங்கம்.

பிறகு யாழ்ப்பாணத்தில கட்சிக்காரர் போட்ட மாலையளும் பொன்னாடையளும் போர்க்களத்துக்குப் போட்டுக்கொண்டு போறதுக்கான சீருடைகள் எண்டொரு விளக்கம்...

இப்பிடியே பழைய சொதியை வைச்சுப் பினாத்து பினாத்தெண்டு பினாத்தியிருக்கிறார் மாவை.

ஆளுக்கு அடிக்கடி மயக்கம் வாறதிருக்கட்டும். ஆள் சனங்களையெல்லோ மயக்கப் பாக்கிறார்.

இதுக்குத் தோதாக இப்ப புதிசாக ஒரு தொப்பி வேற போட்டிருக்கிறார்.

இந்தத் தொப்பியைப் பாக்கத்தான் எனக்குச் சிரிப்புச் சிரிப்பா வருது.

ஏதோ தானும் ஒரு தியாகச் செம்மல் எண்டு ஆரேனும் நினைக்கட்டும் எண்டு நேரு குல்லாய் காந்தி குல்லாய் போட்டிருக்கிறார்.

'ஏனடா ராமசாமி இந்த வில்லங்கம் இந்த வயசில?' எண்டு இதைப் பார்த்திட்டு ஏழாலை நவரத்தினராசா விதானை கேட்கிறார்.

மாவையோட அந்த மாதிரிக் கூட்டு வைச்சிருக்கிற விதானைக்கே இந்த வேச விளையாட்டுப் பிடிக்கேல்லை எண்டால்... மற்றச்சனங்களின்ரை விளப்பம் எப்பிடியிருக்கும்?

பொய்யும் பம்மாத்தும் சுத்துமாத்தும் பேய்க்காட்டும் அளவுக்கு மீறினால்... இப்பிடித்தான்.

இல்லையெண்டால், இன்னும் இப்பிடிப் பச்சைப் புலுடாக்கதையை மாவை சொல்லுவாரோ...?

ஏற்கனவே அறிவிச்ச அறப்போரை நடத்திறதுக்கே ஒரு வக்குமில்லாமல் இருக்கிற தமிழரசுக்கட்சிக்கும் மாவைக்கும் இப்ப தமிழீழ ஆசை வேற பிறந்திருக்கு.

இதுக்காக மக்கள் போராட வேணுமாம்.

மக்கள் எண்டு மாவை ஆரைத்தான் சொல்லுகிறாரோ....!

ஏனெண்டால் மாவையற்றை மக்கள் வெளிநாட்டில இருக்கினம். அவை தேர்தல் பரப்புரைக் காலத்துக்குத்தான் தந்தைக்கேற்ற தனயன்களாக வருவினமே தவிர, போராட்டத்துக்காக வரமாட்டினம்.

அப்பிடி தன்ரை மகன்மாரையே மாவை போராட்டக்களத்தில இறக்கினால் அது ஒரு பெரிய சாதனைதான்.

ஆனால்... இதெல்லாம் நடக்குமா?

அப்பிடித்தான் மாவையின்ரை மக்கள் களமிறங்கினால் அது தமிழரசுக் கட்சியின்ரை பதவிக்கான போட்டியாகத்தானிருக்கும்.

இதை தமிழரசுக்கட்சிக்காரர் பாத்துக்கொள்ளட்டும். நாங்கள் இப்ப மாவையின்ரை வெடிக்கதைகளைப் பற்றிப் பாப்பம்.

இந்த மாவை இப்பிடி வாயால வெடி வைச்சதும் புரட்சி செய்ததும் பீரங்கி அடிச்சதும் பழைய கதை.

இப்ப உள்ள சஞ்சயன், சுகிர்தன் போன்ற பெடியளுக்கு இது ஏதோ பெரிய விசயமாகவும் புதிய புதினமாகவும் தெரியும்.

மாவையைப்பற்றியும் தமிழரசுக்கட்சியைப் பற்றியும் அறிஞ்சவைக்கு இதெல்லாம் புளிச்சுப்போன சங்கதிகள்.

இதில புதிய விசயம் எண்டால் மாவை போட்டிருக்கிற குல்லாய்தான்.

இதிலயும் பெரிய புதினமொண்டும் இல்லை.

இந்திய விசுவாசத்தைக் காண்பிக்கிறதுக்காக மாவை இப்பிடியொரு வேசம் போடுகிறார். அவ்வளவுதான்.

மற்றும்படி தமிழரசுக்கட்சிக்கோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கோ மாவைக்கோ தந்திரோபாயங்களும் இல்லை. மூலோபாயங்களும் இல்லை. தன்னல உபாயங்கள் மட்டுந்தான் உண்டு.

மாவையை நம்பிய தமிழரசுக்கட்சியும் பாழ். மாவையையும் தமிழரசுக்கட்சியையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் நம்பிய மக்களின் வாழ்க்கையும் பாழ். முடிவில எல்லாமே பாழ்.

இதிலிருந்து தப்ப வேணுமெண்டால் மாவையை விட்டு, தமிழரசுக்கட்சியை விட்டு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை விட்டு மீள்...!

மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய கடலுக்கு சமனானது - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அபிமானமும் அவதானமும்!

மொழி ஒருநதி; அது காலத்தைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கிறது என்பார்கள். ஒவ்வொரு பிரதேசத்தினதும் பல்லாயிரம் வருடத்து வாழ்க்கையை அவ்வப் பிரதேசத்துக்குரிய மொழி தனக்குள் கொண்டிருக்கிறது.

பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்துவரும் பண்பாட்டுச் செயற்பாடுகளின் தொடர்ச்சி மொழிவழியாக நிகழ்ந்து வருவதேயாகும். சொல்லப்போனால் அந்தப் பண்பாடே மொழிதான். மனிதர்களை உருவாக்குவதும் மொழிதான்.

"மொழிதான் நமக்கு உலகத்தை அளிக்கிறது. அதேசமயத்தில் அந்த உல்கத்துக்கான எல்லைகளையும் அது வரையறுத்து விடுகிறது.... இன்னொருபுறம் இந்த உலகின் இருப்பை சாத்தியப் படுத்துவதாகவும் மொழி செயற்படுகிறது" என்றார் நீட்ஷே.

ஒவ்வொருவரிடமும் உள்ளே ரத்தமாகவே ஓடுமளவுக்கு மொழி உயிராகக் கலந்திருக்கிறது. அதற்காகப் பல்லாயிரம் பல லட்சம் உயிர்களை அழிக்கும் போர்கள் செய்யவும் தயங்காததாக மனிதகுலம் இருக்கிறது.

மொழி நமக்கு கிறுகிறுப்பை ஏற்படுத்துகிறது; உணர்ச்சிவசப்பட வைக்கிறது; ஒன்றுபடுத்துகிறது; உயிரை இழக்கவும் கொல்லவுமான ஆவேசத்தையளிக்கிறது; இன்னும் என்னவெல்லாமோ செய்ய வைத்துவிடும் சக்தியைக் கொண்டிருக்கிறது.

மொழியை உயிருக்கு நேராகக் காண்பதும், மொழிக்கு இன்னல் விளைந்தால் அவரைச் சங்காரம் செய்துவிடத் துடிப்பதும், பாடையில் ஏறுவதானாலும் சரி ஓடையில் சாம்பலாய்க் கலப்பதானாலும் சரி உவகையுடன் வரவேற்பதும், மொழிக்காக எத்தனை ஆயிரம் உயிர்கள் வேண்டுமானாலும் அழியலாம் என்று துடிப்பதும் எதனால் நேர்கிறது?

மொழி வெறும் ஊடகம் என்ற அளவில் நின்றுவிடாமல், மனிதனை இயக்குகிற சக்தியாக, சொல்லப் போனால் மொழியே அவனாக மாறுகிற விந்தை எவ்விதம் நிகழ்ந்தது!

முனைவர் க.பஞ்சாங்கம் ஒரு கட்டுரையில் இப்படிச் சொல்கிறார்: "மொழியைத் தவிர மனிதர்கள் வேறு அல்லர். மனிதர்கள் கடவுளால் அல்ல, மொழியால் வடிவமைக்கப்பட்டவர்கள். மனிதத் தன்னிலையின் நனவிலி மனம் முழுவதும் மொழியின் குறியீடுகளால் நிரம்பி வழிகிறது; மொழியின் ஆவணக் காப்பகமாக ஆழப்பட்டுக் கிடக்கிறது. மொழிதான் மனிதனுக்கான பிரச்சினை என்றுகூடச் சாராம்சப்படுத்திவிட முடியும்போல் தோன்றுகிறது" என்கிறார்.

மொழியைக் காரணமாக்கி மனிதர் ரத்தத்தைத் துடிப்புறச் செய்ய் முடிகிறது. வன்முறைக்கும் உயிர்க் கொலைகளுக்கும் கூட இந்த மொழி அபிமானம் மனிதரைக் கொண்டுசெல்கிறது.

நமது மொழியைப் பேசாதவன் மீது அந்தரங்கத்தில் நமக்கொரு எதிர்ப்புணர்வு இருந்துகொண்டேயிருக்கிறது. அவனை நம்மிலிருந்து விலக்கிவிட நமது மொழி மீதான அபிமானத்தைக் கவசமாக உயர்த்திப் பிடித்துக் கொள்கிறோம்.

எந்த பாதகமும் அற்றது இயல்பானது என்று நாம் கருதுகிற மொழிப் பற்றானது, பிறரைச் சகிக்கமுடியா மனநிலைக்கு நம்மைத் தள்ளிச் சென்றுவிடுவது இவ்வாறுதான்.

இதைப் போலவேதான் இனஅபிமானம், தேசஅபிமானம், சாதிஅபிமானம், மதஅபிமானம் எல்லாமே நம்மைப் பிறவற்றிலிருந்து தனிப்படுத்தி வன்முறைக்குத் தயாராக்கி வருவதைக் காண்கிறோம். இவற்றின் காரணமாகவே உலகில் நூற்றுக்கணக்கான போர்கள், காலம் காலமாக நடந்து வருகின்றன; லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மனிதர்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள் என்பதையும் நாமறிவோம்.

இதனால்தான், எந்த ஒன்றின் மீதும் கொள்ளும் அபிமானமே உலகின் துக்கங்களுக்கெல்லாம் காரணம் என்று புத்தர் சொல்லியிருக்க வேண்டும். இனமோ, மதமோ, மொழியோ எந்த ஒன்றின் மீதும் விமர்சனத்திற்கு அப்பாலான அபிமானம் வேண்டியதில்லை.

- ஆசிரியர்

# ஊவாவில் உற்சாக வாக்களிப்பு

# தேர்தல் முறைப்பாடுகளும் தாராளம்

ஊவா மாகாண சபைத் தேர்தலில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இறுதித் தருணம் வரை காத்திருக்காமல் உரிய நேரத்திற்குள் வாக்களிப்பில் கலந்துகொள்ளுமாறு தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஏற்கனவே வாக்களார்களிடம் கேட்டிருந்தனர்.

பதுளை மாவட்டத்தில் நேற்று முற்பகல் 12 மணி வரை 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியிருந்ததாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ரோஹன கீர்த்தி திசாநாயக்க குறிப்பிடுகின்றார்.

பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இணைப்பு அலுவலக உத்தியோகத்தர்களும் தேர்தல் கடமைகளில் தொடர்ந்து ஈடுபடு வருவதாக பதுளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி சுட்டிக் காட்டினார்.

மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பொலிஸார் சிறப்பான முறையில் பேணி வருவதுடன், இதுவரை எவ்வித அசம்பாவிதங்களும் தமக்கு பதிவாகவில்லை என்றும் அவர் நேற்று மாலை தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்திலும் தேர்தல் சுமுகமாக நடைபெற்று வருவதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ரோஹன கீர்த்தி திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டத்தில் நேற்றுக் காலை பத்து மணிவரை 40 வீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியிருப்பதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி அந்தோனிபிள்ளை பத்திநாதன் தெரிவித்தார்.

• இதேவேளை, ஊவா மாகாணசபைத் தேர்தலில் காலை வேளையில் மக்கள் ஆர்வமாக வாக்களித்த போதிலும், மாலையில் சற்று மந்த கதியில் வாக்களிப்பு இடம்பெறுவதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் குறிப்பிட்டார்.

வாக்களிப்பு தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக, தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாடுகளை ஏற்கும் தேசிய பிரிவு நேற்றுக் காலை 6.30 முதல் இயங்கி வந்தது.

பதுளை மாவட்டத்திற்கான முறைப்பாடுகளை 0112 877 622 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும், மொனராகலை மாவட்டத்திற்கான முறைப்பாடுகளை 0112 877 622 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்க முடியும். என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

# வெற்றுத் தகரமாக அரசு மாறிவிட்டதா?

## தம்பர அமிலதேரர் கண்டனம்

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வெற்று தகரடப்பாவை போன்றது என ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் தொல் பொருள் ஆய்வு பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உட்பட அரசாங்கம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் சர்வதேச தொடர்புகளை முன்னெடுத்து வரும் விதத்தை பார்க்கும் போது இதனை எம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையில் உள்ள பௌத்த பிக்குமார் தற்போதுள்ளதை விட அரசியல் மயமாக வேண்டும். மகிந்த தேரரின் இலங்கை வருகை கூட அரசியல் மயமானது.

அவருக்கு பின்னர் உருவாகிய சகல பிக்குமாரும் அரசியல் மயமானவர்கள்.

முழு சங்க சாசனமும் அரசியல் மயமானது.

இலங்கையின் அரசியல் மேடைகளில் பிக்குமார் இல்லாததே பெரும் அனர்த்தமான நிலைமை. நாட்டை அராஜக நிலைமைக்கு கொண்டு செல்லும் ஆட்சியாளர்களுக்கு பிக்குமார் அரசியலுக்குள் வராதது நன்மையாக மாறியுள்ளது. இதனால், பிக்குமார் கட்டாயம் அரசியல்மயமாக வேண்டும். எதிர்காலத்தில் நான் இதனை விட தீவிர அரசியலில் ஈடுபடுவேன். அதேபோல் பொதுபல சேனா அமைப்பு பாரிய வலுவைக் கொண்ட அமைப்பு அல்ல. அந்த அமைப்பிற்கோ, ஞானசார தேரருக்கோ பலம் கிடையாது. அவர்களின் பின்னால் அரசின் சக்தியும் நிழலுமே உள்ளது எனவும் தம்பர அமில தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊவாவில் வெளியார் பிரசன்னம் "கபே" அமைப்பு குற்றச்சாட்டு

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஊவா மாகாணத்தின் பல பகுதிகளிலும் வாகனங்களில் சஞ்சரிப்பதாக கபே தேர்தல் கண்காணிப்புக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்றுக்காலை வாக்களிப்பு ஆரம்பமானது முதல் 11 மணி வரையில் தேர்தல் வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் 39 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

பண்டாரவளை மற்றும் வெலிமடை பிரதேசங்களிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

காலை வேளையில் வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற்ற போதிலும், பின்னர் சில சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கபே தெரிவித்துள்ளது.

மொனராகல மாவட்டத்தில் 40 வீதமானவர்கள் வாக்களித்துள்ளதாகவும் பதுளை மாவட்டத்தில் 30 வீதமானவர்கள் வாக்களித்துள்ளதாகவும் 'கபே' குறிப்பிட்டுள்ளது.

# மழைநீரைச் சேமித்தால் வறட்சியை விரட்டலாம்

## வலி.மேற்கு எதிர்க்கட்சித்தலைவர் கோரிக்கை

பெரும்போக காலங்களில் வழுக்கையாறு ஊடாக கடலுக்குள் வருடாந்தம் செல்லும் மழை நீரை தடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வில்லை.

விரைவில் இதற்கு ஓர் பொறிமுறை திட்டம் வகுத்து இவ்வாண்டில் இருந்து அராலி பாலம் ஊடாகச்செல்லும் மழை நீர் தடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேசசபை எதிர்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தெரிவித்தார். வலி.மேற்கு குடிதண்ணீர் தொடர்பான பிரதேச மட்ட அபிவிருத்திக் கூட்டம் முடிவடைந்த பின் சிவகுரு பாலகிருஸ்ணன் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்: தெல்லிப்பளையில் இருந்து வலிகாமம் முழுவதும் பெரும் போக காலங்களில் சேரும் மழை நீர் கந்தரோடை சங்குவேலி நவாலி ஊடாக அராலிப பாலம் வழியே கடலுக்குள் நன்னீரான மழைநீர் செல்கின்றது.

இம் மழைநீர் தொடர்பில் கடந்த காலங்களில் நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் பிரதேச செயலர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தேன்.

ஆனால் 200 மில்லியன் ரூபாவில் வழுக்கையாறு திட்டம் புனரமைக்கப்பட்டு நீர் தேக்கப்படுவதற்கு பதிலாக அனைத்து மழைநீரும் கடலுக்குள் செல்லுவது வருத்தமளிக்கிறது.

எனவே இவ்விடயத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாணவிவசாய அமைச்சர், யாழ். நீர்ப்பாசன பொறியியலாளர் ஆகியோர் இவ்விடயத்தில் கூடுதல் கரிசனை கொண்டு நடவடிக்கை எடுத்தால் எதிர்காலத்தில் எமது வலிகாமம் பிரதேசத்தில் ஏற்படும் வறட்சியை தணித்து நிலத்தடிநீரை பேணி குடிதண்ணீரை பெறலாம்.

இல்லாதுவிடில் எமது பிரதேசம் வறட்சியால் இனம் காணப்பட்டு மக்கள் வாழமுடியாத ஒரு பிரதேசமாக இன்னும் 25 ஆண்டு காலத்தில் எதிர்கொள்ளநேரிடும்

எனவே வலிகாமத்தில் உள்ள சபைகளின் தவிசாளர், செயலாளர், பிரதேச செயலர் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் ஆகியோர் இவ்விடயத்தில் கூடுதல் கரிசனை கொள்ளவேண்டும் என பாலகிருஸ்ணன் (ஜீவன்)கேட்டுள்ளார். (92)

**எந்த இலக்கை நோக்கி நகர வேண்டும் என்று மாவை கூறுகின்றார்? தனி நாட்டு இலக்கை நோக்கியா? சமஷ்டியை நோக்கியா? அதிகாரப் பகிர்வை நோக்கியா? அல்லது அதிகாரப் பரவலாக்கலை நோக்கியா? இலக்கு எது என்பதில் சேனாதிராசாவுக்குத் தெளிவில்லை. மக்களுக்கும் தெரியாது. இந்த நிலையில் இலக்கை நோக்கி நகரும் வரை தூங்கக்கூடாது என்பதை இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கொமெடியாகக் கருதலாம்.**



# எதற்காக ஐக்கியப்பட வேண்டும்? தீர்வுக்காகவா? வாக்குகளுக்காகவா?

## சங்கர சிவன்

தமிழ் மக்கள் ஐக்கியப்பட வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் அடிக்கடி கோரிக்கை விடுக்கின்றார்கள். இப்போதும் மக்கள் மத்தியில் ஐக்கியம் இருப்பதால்தானே இந்தத் தலைவர்கள் எல்லாத் தேர்தல்களிலும் வெற்றியீட்டுகின்றார்கள். மக்கள் ஐக்கியமாக இருப்பதால்தான் கூட்டமைப்புத் தலைவர்களின் பொய்களும் புலுடாக்களும் தேர்தல்களில் செல்லுபடியாகின்றன.

மக்கள் ஐக்கியப்பட வேண்டும் என்ற கூட்டமைப்பின் கோரிக்கை சிரிப்புக்கிடமானது. எதற்காக ஐக்கியத்தைக் கோருகின்றார்கள்? கூட்டமைப்புக்கு வாக்களிப்பதற்காகவா?

மக்கள் ஐக்கியப்பட வேண்டும் என்று கூறுபவர்கள் தங்களுக்குள் ஐக்கியப்பட முடியாமல் திணறுகின்றார்கள். ஜனநாயக அரசியலுக்குள் கூட்டமைப்பு அடியெடுத்து வைத்து ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் இவர்களுக்கிடையே ஒற்றுமை இல்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு பக்கமாக இழுக்கின்றார்கள்.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு மேலாக எந்தப் பொறுப்பும் கூட்டமைப்புக்கு இல்லை. மற்றைய எல்லாப் பிரச்சினைகளும் இரண்டாம் பட்சமானவை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் மற்றைய பிரச்சினைகள் இருக்கப்போவதில்லை. இனப்பிரச்சினை தீராதிருக்கும் வரை எத்தனை சத்தியாக்கிரகங்களையும் வீதி ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினாலும் மற்றைய பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே இருக்கும். இதைக் கண்முன்னால் பார்க்கிறோம். பொதுமக்களின் காணிகளைப் படையினர் கையகப்படுத்தல், தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்புலங்களில் சிங்களக் குடியேற்றம் போன்றவை இனப்பிரச்சினைக்கு அடுத்த படியாக முக்கிய பிரச்சினைகள். இந்த விடயங்கள் பற்றித் தமிழ்த் தலைவர்கள் காலங்காலமாகப் பேசி வருகின்றார்கள். பிரச்சினை வளர்கின்றதேயொழியக் குறையவில்லை. இனப்பிரச்சினையைக் கிடப்பில் போடாமல் ஆக்கபூர்வமான முறையில் அரசியல் தீர்வு முயற்சியில் அக்கறை செலுத்தியிருந்தால் இந்த வளர்ச்சியைத் தவிர்க்க முடிந்திருக்கும்.

தமிழ் மக்களின் அரசியலில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அதி முக்கியமானது. ஆனால், கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இந்த முக்கியத்துவம் விளங்கவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்காக இவர்களால் ஐக்கியப்பட முடியவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஐக்கியம் என்பது தீர்வுத் திட்டமொன்றின் அடிப்படையில் உருவாகும் ஐக்கியமாகும். இவர்களிடம் அந்த ஐக்கியம் இல்லை. தீர்வைப் பொறுத்த வரையில் ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் நிற்கின்றார்கள். இந்த லட்சணத்தில் மக்கள் எல்லோரும் ஐக்கியப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதைப் பார்த்துச் சிரிக்காமல் என்ன செய்வது?

தீர்வுத் திட்டம் தொடர்பான ஐக்கியம் கூட்டமைப்புக்குள் இல்லாதிருப்பது கூட்டமைப்புத் தலைவர்களின் சொந்த விடயமல்ல. இது தமிழ் மக்களை வெகுவாகப் பாதிக்கின்றது.

இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் சிங்கள மக்களும் சம்பந்தப்படுகின்றார்கள். பதின் மூன்றாவது திருத்தத்திலும் பார்க்க மேலான தீர்வொன்றை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமானால் அத்தீர்வு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறவேண்டும். அதற்குச் சிங்கள மக்களின் ஆதரவு அத்தியாவசியமானது. இனப்பிரச்சினை விடயத்தில் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள சிங்களத் தலைவர்களூக்கூடாகவே அந்த ஆதரவைப் பெற முடியும். தீர்வுத் திட்டமொன்று கைவசம் இல்லாமல் சிங்களத் தலைவர்களுடன் எதை வைத்துப் பேசுவது? எத்தகைய தீர்வுக்காக அவர்களின் ஆதரவைக் கோருவது? கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டம் இல்லாமை அரசியல் தீர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்குத் தடையாக இருப்பதால் அது தமிழ் மக்களை நேரடியாகப் பாதிக்கின்றது.

சர்வதேச சமூகம் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்று ஐந்து வருடங்களாகக் கூறுகின்றார்கள். இவர்கள் சர்வதேசம் பற்றிப் பேசத் தொடங்கிய நாட்களில் என்றாலென்ன இப்போதென்றாலென்ன எந்தவொரு வெளிநாடும் இலங்கையின் இனப்பிரச்சினையில் சிறிதளவாவது அக்கறை செலுத்தவில்லை. தீர்வு பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. இந்தியா மாத்திரம் அதன் சொந்த நலன் காரணமாக இனப்பிரச்சினையின் தீர்வில் ஓரளவு அக்கறை செலுத்தியதேயொழிய வேறெந்த நாடும் திரும்பியும் பார்க்கவில்லை. மேற்கத்திய நாடுகள் இலங்கையின் இனப்பிரச்சினையில் காலத்துக்குக் காலம் வெவ்வேறு விதமாக ஈடுபாடு காட்டியிருக்கின்றன. ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்துக்கு ஆயுத உதவியும் நிதியுதவியும் இந்நாடுகள் வழங்கின. இந்த நாடுகளின் உதவியுடன் தான் ஜே.ஆர். ஜெயவர்த்தன யுத்தத்தை முன்னெடுத்தார். இதே நாடுகள் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் போர்க்குற்ற விசாரணையில் அக்கறை செலுத்துகின்றன. இரண்டு காலப் பகுதியிலும் மேற்கத்திய நாடுகளின் அக்கறைகள் வேறுபடுகின்றபோதிலும் நோக்கம் ஒன்றே. உலக மட்டத்திலான அதிகாரப் போட்டியில் அரசாங்கத்தைத் தங்கள் பக்கத்துக்கு வளைத்தெடுக்க வேண்டும் என்பதே நோக்கம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் மற்றைய பிரச்சினைகள் இருக்கப்போவதில்லை. இனப்பிரச்சினை தீராதிருக்கும் வரை எத்தனை சத்தியாக்கிரகங்களையும் வீதி ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினாலும் மற்றைய பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே இருக்கும்....இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஐக்கியம் என்பது தீர்வுத் திட்டமொன்றின் அடிப்படையில் உருவாகும் ஐக்கியமாகும். இவர்களிடம் அந்த ஐக்கியம் இல்லை. இந்த லட்சணத்தில் மக்கள் எல்லோரும் ஐக்கியப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதைப் பார்த்துச் சிரிக்காமல் என்ன செய்வது?

எந்தவொரு வெளிநாடும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் அக்கறை கொள்ளவில்லை என்பது தெரிந்திருந்தும் சர்வதேசம் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் அன்று கூறினார்கள்.

இவர்கள் இப்படியாக அன்று கூறியிருக்காவிட்டால் ஒரு தீர்வை முன்வைத்திருக்க வேண்டும். அதன் அடிப்படையில் மக்களை அணி திரட்டி ஒரு போராட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டும். இவர்களிடம் தீர்வுத் திட்டம் இல்லை. தீர்வு எது என்பதில் உடன்பாடு காண முடியாத அளவுக்குக்கூட்டமைப்பு சாம்பார்க் கூட்டாக இருக்கின்றது. மக்களை அணி திரட்டி வெகுஜனப் போராட்டமொன்றை நடத்தும் திறமையும் திராணியும் கூட இவர்களுக்கு இல்லை. தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதிலும் வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுப்பதிலும் தங்கள் இயலாமையை மூடி மறைப்பதற்காகச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற கதையைத் தொடங்கினார்கள். வெளிநாடுகளில் அளவுக்கதிகமாக நம்பிக்கை வைத்துப் பழகிப் போன தமிழ் மக்கள் கூட்டமைப்பின் இந்த புலுடாவை நம்பினார்கள். இன்றும் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பது கூட்டமைப்பின் வழமையான வெற்றுக் கோஷங்களில் ஒன்றாகிவிட்டது. கூட்டமைப்புத் தலைமை தாங்கள் எதிர்பார்க்கும் தீர்வைச் சொல்லாமல் சர்வதேசம் எதுவும் செய்யாது. கூட்டமைப்பின் இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டினால் தமிழ் மக்கள் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றார்கள்.

இந்த லட்சணத்தில் இலக்கை நோக்கி நகரும் வரை தமிழ் மக்கள் தூங்கி விடக்கூடாது என்கிறார் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா. இன்னும் இலக்கை நோக்கி நகரத் தொடங்கவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறார். இனப்பிரச்சினையின் தீர்வை நோக்கிய நகர்வைத் தொடங்காமல் ஐம்பத்தெட்டு வருடங்களாகத் தமிழரசுக் கட்சி தூங்கிக் கொண்டிருந்ததா?

எந்த இலக்கை நோக்கி நகர வேண்டும் என்று மாவை கூறுகின்றார்? தனி நாட்டு இலக்கை நோக்கியா? சமஷ்டியை நோக்கியா? அதிகாரப் பகிர்வை நோக்கியா? அல்லது அதிகாரப் பரவலாக்கலை நோக்கியா?

இலக்கு எது என்பதில் சேனாதிராசாவுக்குத் தெளிவில்லை. மக்களுக்கும் தெரியாது. இலக்குத் தொடர்பான உடன்பாடு கூட்டமைப்புக்குள் இல்லை. இந்த நிலையில் இலக்கை நோக்கி நகரும் வரை தூங்கக்கூடாது என்பதை இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கொமெடியாகக் கருதலாம்.

அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் என்பதில் மாத்திரம் கூட்டமைப்புக்குள் ஐக்கியம் காணப்படுகின்றது. அதை விட வேறு எதிலும் ஐக்கியம் இல்லை. கொள்கையில் ஐக்கியம் இல்லை. தனிப்பட்ட மட்டத்திலும் ஐக்கியம் இல்லை. ஆளையாள் அடிவயிற்றில் அடிக்கின்றார்கள்.

எதிர்ப்பு அரசியல் மூலம் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. ஆனால், தலைவர்கள் தங்களுக்கு எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டார்கள். ஆவேசப் பேச்சுக்கள் மூலம் மக்களிடம் எதிர்ப்புணர்வை வளர்த்துத் தங்கள் அதிகாரக் கதிரைகளைக் காப்பாற்றிக் கொண்டார்கள். வட்டியில்லாத சொகுசு வாகனங்களையும் வேறு வசதி வாய்ப்புகளையும் எவ்வித தயக்கமும் இல்லாமல் பெற்றுக் கொண்டார்கள். ஆனால், மக்கள் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு இல்லாமல் நொந்த வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

மக்கள் ஐக்கியப்பட வேண்டும் என்று மேடைக்கு மேடை கோஷம் போடுவதை விட்டுத் தலைவர்கள் முதலில் ஐக்கியப்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றின் அடிப்படையில் ஐக்கியப்பட வேண்டும். இனப்பிரச்சினையின் தீர்வுக்கான திட்டம் எதுவும் இல்லாமல் சாத்வீகப் போராட்டம் என்றும் சர்வதேசம் என்றும் பேய்க் காட்டும் அரசியல் நீண்ட காலம் நீடிக்காது. தாங்கள் இவ்வளவு காலமும் ஏமாற்றப்பட்டு வந்ததை மக்கள் விளங்கிக்கொள்ளத் தொடங்கினால் புலுடாத் தலைவர்களைத் தூக்கியெறிய அவர்கள் தயங்க மாட்டார்கள்.

# எல்லைதாண்டும் இந்திய மீனவர் விவகாரம்

## கொழும்பில் இரு தரப்பு பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இந்திய இலங்கை மீனவர்கள் தொடர்பான சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் தொடர்பாக கொழும்பில் உயர்மட்ட பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

எல்லைதாண்டிச் சென்று தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் நடவடிக்கை காரணமாக இலங்கை மீனவர்கள் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது விடயமாக ஏற்கனவே இரு நாட்டு அதிகாரிகளுக்கு மிடையே பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இதன் தொடர்ச்சியாகவே கொழும்பில விசேட பேச்சுக்கள் இடம் பெற்றன.

ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான முரளிதர் ராவோ இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன.

பல்வேறு மிக முக்கியமான விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

புதிய அரசாங்கம் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் எனவும், பிரச்சினைகளை புரிந்து கொள்ளும் எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பாக இருநாட்டு அதிகாரிகள் மட்டத்திலான சந்திப்புக்கள் இந்தவாரம் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளன.

# கடன் அடிப்படையில் விதைநெல் விநியோகம்

## அமைச்சரவை அனுமதி



(கொழும்பு)

கடன் அடிப்படையில் விதை நெல் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வருட ஆரம்பம் தொடக்கம் நிலவும் வரட்சி காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் நெற்பயிர் செய்கையாளர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டனர்.

மேலும் மழை பெய்யத் தொடங்கியவுடன் நெற்பயிர்ச் செய்கைக்கான விதை நெல் பெற்றுக்கொள்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கும் விவசாயிகளுக்கு விதை நெல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கமத்தொழில் திணைக்களத் திடம் விலை கொடுத்து வாங்கி விவசாயிகளுக்கு விநியோகிக்கவும் விளைச்சலின் பின்னர் அதற்கான பெறுமதிப் பணத்தை விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளல் தொடர்பிலும் கமத்தொழில் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன அமைச்சரவையில் முன் வைத்த கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

# இருதய வால்வு வங்கி

## கொழும்பில் அமைக்க முடிவு

(கொழும்பு)

கொழும்பில் இருதய வால்வுகளைச் சேமித்து வைக்கும் வகையில் இருதய வால்பு வங்கி அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதி கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் ஆண்டுதோறும் பிறக்கும் பிள்ளைகளில் 2500, 3000 வரையான குழந்தைகள் இருதய வால்வு பிரச்சினையுடன் பிறக்கின்றனர் என ஆய்வொன்றினூடாக கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் 2000 வரையான குழந்தைகளுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவை காணப்படுகின்றது.

இதற்கு சுமார் 30000 ரூபா வரையில் செலவாகும் அப்பணத்தை அரசாங்கமே செலவிடுகிறது. மனித இருதய வால்வுகளை பெற்றுக்கொள்ளல் தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு தேவையான வசதிகளுடன் கூடிய வங்கி இன்மையே இச்சத்திர சிகிச்சையின்போது விலங்குகளின் வால்வு பொருத்தப்படுவதற்கு பிரதான காரணம்.

மேலும் குழந்தைகளுக்கான இருதய நோய் தொடர்பான சத்திரசிகிச்சைகளை ரிஜ்வே குழந்தைகள் மருத்துவமனையில் மட்டும் செய்யும் வசதிகள் காணப்படுகின்றன. எனவே மனித இருதய வால்வு வங்கி ஸ்தாபிப்பதற்கு பொருத்தமான இடம் அந்த மருத்துவமனையே எனவே 30 மில்லியன் ரூபா செலவில் வால்வு வங்கி ஸ்தாபிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிரிசேன முன் வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# கலாசார அமைச்சருக்கு சங்கடம்

## சுதாகரித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கவில்லை

(கொழும்பு)

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரின் முன்னிலையில் நடைபெற்ற விழாவுக்கு நான், அணிந்து சென்ற பாதணிகள் என்னுடையவை தான். ஆனால் பழையவை என்று கலை மற்றும் கலாசார அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையில் 20 ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் நிகழ்வு, காலி முகத்திடலில் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தான் அணிந்து சென்ற பாதணிகள் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், வீட்டிலிருந்து பாதணிகளில் இரண்டை அணிந்து சென்றேன். அந்த பாதணிகளின "அடிப்பகுதிகள் இரண்டுமே இடைநடுவில் கழன்றுவிட்டன.

பாதணிகள் இரண்டும் வெள்ளைநிறமானவை. அவை நான் உடுத்தியிருந்த உடைக்கு பொருத்தமாக இருக்கும் என்பதனால் அதனை அணிந்து சென்றேன். ஆனாலும் நீண்ட நாட்களாக அந்த பாதணிகளை அணியவில்லை.

பழைய பாதணிகள் என்பதுனால் இடைநடுவில் அடிப்பகுதி




கள் கழன்றுவிட்டன. என்ன செய்வது. விழாவுக்கு செல்லவேண்டும் சீன ஜனாதிபதியுடன் கைலாகு கொடுப்பது எப்போதாவது ஒரு தடவை கிடைக்கின்ற சந்தர்ப்பமாகும். அதனால், நான் அடிப்பகுதிகள் கழன்ற பாதணிகளோடு சென்றுவிட்டேன்.

நாங்கள் கிராமத்து மக்கள், மண்ணில் பாதங்களை பதித்து நிற்கின்ற மனிதர்கள். பாதணிகள் இரண்டும் நடந்ததை பற்றி நான் எதுவும் நினைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

# வலுவான வர்த்தக உறவு

## ரஷ்யாவுடன் ஏற்படுத்த முயற்சி

### விசேட ஆணைக்குழு அமைக்கவும் ஏற்பாடு



(கொழும்பு)

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் வர்த்தக பொருளாதார உறவுகளை பலப்படுத்துவதற்காக விசேட ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் ரஷ்ய ஆகிய நாடுகளுக்கிடையில் வர்த்தக ஒத்துழைப்பு செயற்பாடுகள் கடந்த வருடங்களில வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கமைய கடந்த 2001 ஆம் ஆண்டு 11.6 மில்லியன் அமெ. டொலர் ஆக காணப்பட்ட ரஷ்யாவுக்கான ஏற்றுமதி 2013 ஆம் ஆண்டில் 279.91 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளன.

இவ்விரண்டுவருட காலத்திற்குள் ரஷ்யாவுக்கு இலங்கையின் ஏற்றுமதி 3.7 அமெ. டொலரில் இருந்து 145.85 ஆக அதிகரித்துள்ளது. எனவே இருநாடுகளுக்குமிடையில் வர்த்தக- பொருளாதார விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் வணிகம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

## வடக்கில் ரயில்பாதை புனரமைப்பு

### இந்தியாவிடம் மேலதிக கடன் உதவி

வடக்கின் ரயில்பாதை புனரமைப்புக்குத் தேவையான மேலதிக நிதியை இந்திய அரசிமிருந்து கடனாகப் பெறுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஏற்கனவே இந்த புனரமைப்புக்காக மேறகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் சில மாற்றங்களை செய்வதற்கும் மேலதிக கடன் தொகையை பெறுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மதவாச்சி தொடக்கம் மடு வரை மற்றும் ஓமந்தை தொடக்கம் பளை வரை ரயில் பாதை நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது மடு தொடக்கம் தலைமன்னார் வரையில் ரணில் பாதை மற்றும் சமிக்ஞை மறறும் மின்தொடர்பாடல் அமைத்தல் தற்போது நிர்மாணிக்கப்படுகிறது. இதற்காக செலவாகும் நிதியில் மாற்றம் செய்வது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம முன்வைத்த முன்மொழிவிற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

# இலங்கை முதியவர்

## புதுடில்லியில் மாயம்

(கொழும்பு)

புதுடில்லியில் இலங்கையைச் சேர்ந்த முதியவர் ஒருவர் புதுடில்லியில் காணாமற்போயுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரான்சிஸ் யோசிங்டன் பெர்னான்டோ (வயது-60) என்பவரே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

தனது மருமகளுடன் இந்தியா சென்ற இவர் கடந்த 5 ஆம் திகதி காணாமற் போய் விட்டதாக அவரின் மருமகள் இந்தியா பொலிஸாரிடமும் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

அவரது கடவுச்சீட்டையும் விமான சீட்டையும் விமான டிக்கட்டையும் தாம் இலங்கைத் தூதரகத்தில் ஒப்படைத்திருப்பதாக அவரின் மருமகள் தெரிவித்தார்.

எனினும் தூதரக அதிகாரிகள் தமக்கு இந்த விடயம் குறித்து முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

# சுற்றுலாப் பயணிகள் வருகை

## இந்த ஆண்டு ஏறுமுகம்

### வருமானமும் அதிகம்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 319 பேராகும் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை கூறுகின்றது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை விட இது 47.06 வீதம் அதிகமாகும். 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுற்றுலாப்பயணிகள் 1,23,269 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இந்தியா, ஐக்கிய ராஜ்ஜியம், சீனா, ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தே இந்த எண்ணிக்கையான சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் வருகையால் இலங்கைக்கான வருமானம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




யாழ்.இந்துக்கல்லூரியின் தமிழ் மொழித்தினவிழா நேற்றுமுன்தினம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது தேசிய மட்ட வில்லுப்பாட்டு போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு விருந்தினர்களுடன் நிற்பதையும், மாணவர்களின் நாடக நிகழ்வினையும் காணலாம். (48)

# யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட 5719 இடங்களில் டெங்கு பரிசோதனை

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தில் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட 5719 இடங்களில் டெங்கு நுளம்பு கட்டுப்பாடு தொடர்பில் பரிசோதிக்கப்பட்டதாக யாழ்.பொலிஸ் நிலைய சுற்றுச் சூழல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரணவீர தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு வாரத்தின் போது. பிராந்திய சுகாதார பணிமனையினரின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், வைத்தியர்கள், கிராம அலுவலர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் என ஏழு நாட்களிலும் 1350 பேர் இத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது 182 அரச, தனியார், திணைக்களங்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்கள் எனபனவும் 5537 பொதுமக்களின் வீடுகளும் பரிசோதிக்கப்பட்டன.

இவ்வாறு பரிசோதிக்கப்பட்ட இடங்களில் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான குடம்பிகள் காணப்பட்ட 140 இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றை அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன். 1122 இடங்கள் நுளம்பு பரவ ஏதுவான, காரணிகளைக கொண்டிருந்தமையும் கண்டு பிடிக்கப்பட்டது. அவ்வாறான பகுதிகளின் உரிமையாளர்களுக்கு அது பற்றி அறிவுறுத்தப்பட்டதுடன், வெற்றுக்காணிகளாக காணப்பட்ட 67 இடங்களில் அறிவுறுத்தல்கள் ஒட்டப்பட்டதுடன் இரு வாரங்களுக்குள் துப்புரவு செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

இது தவிர 12 பேர் மீது டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்தமைக்காக வழக்கு தாக்கல் செயயப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு அதிகாரிகளின் பரிசோதனையின் போது பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி ரணவீர மேலும் தெரிவித்தார். (இ)

# பொது இடங்களில் இடையூறு விளைவிக்கும் நபர்கள் மீது பொலிஸ் நடவடிக்கை

இளவாலைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொது இடங்களில் வைத்து மதுபானம் அருந்துபவர்கள் மற்றும் பொது மக்களுக்கு இடையூறாகநடந்துகொள்பவர்கள், சந்திகள், பொது இடங்களில் கூடி நின்று பொது மக்களுக்கும் பெண்கள் சிறுவர்களுக்கு இடையூறுவிளைவிப்பவர்கள் மீது பொலிஸாரின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் பெரியவிளான் சந்தியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் வைத்து மதுபானம் அருந்திய தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டபின் அவர்களது குடும்பத் தலைவிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்திற்கு வரும் பெண்களிடம் உடனடியாக அவரகள் வந்த விடயம் விசாரிக்கப்பட்டு பதிவு செய்யப்படுவதுடன் காலதாமதம் இன்றி அவர்களை அனுப்பவும் நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இளவாலைப் பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ள பரித்ஹவுஸ் இத்தகையநடவடிக்கைகளை பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அநாகரிகமாக செயற்பட்ட இளைஞருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு பெண்மணி ஒருவரிடம் அநாகரிகமான முறையில் செயற்பட்ட இளைஞரை எதிர்வரும் ஒக் டோபர் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண்ணிடம் அரசடி வீதிப் பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு அநாகரிகமான முறையில் நடந்து கொண்டுள்ளார்.

பிரபல வெளிநாட்டு ஆங்கில கற்கை நிறுவனத்தில் கடமையாற்றும் குறித்த பெண், அண்மையில், தனது அலுவலக கடமையினை நிறைவு செய்து விட்டு தனது வதிவிடத்திற்கு செல்லும் வழியில் குறித்த இளைஞர் இவ்வாறு அநாகரிகமான முறையில் நடந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அப் பெண் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததை தொடர்ந்து, குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டு, யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார். மேற்படி இளைஞரை கடந்த வியாழக்கிழமை யாழ். நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தி அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்திய போது, பாதிக்கப்பட்ட பெண் இளைஞரை அடையாளம் காட்டியுள்ளார். அதனையடுத்து, யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி இளைஞரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (25)

# இளைஞனின் சடலம் மீட்பு

திருவடி நிலைப்பகுதியில் கடலுக்கு குளிக்க சென்று காணாமற் போன இளைஞரின் சடலம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை கரையொதுங்கியது. திருவடிநிலை கடலுக்கு குளிக்கச் சென்ற இரு இளைஞர்களில் ஒருவர் நீந்திக் கரையை அடைந்தார். மற்றொருவர் காணாமற் போயிருந்தார். அவரது சடலமே நேற்றுமுன் தினம கரையொதுங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நெல்லியான் சுழிபுரத்தைச் சேர்ந்த யோகநாதன் சுரேஸ்குமார் (வயது19) என்பவரின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

# அனர்த்த செயலமர்வு



வலயக் கல்வி அலுவலகங்களில் கட்மையாற்றும் கல்வி அதிகாரிகளுக்கு அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பான செயலமர்வு நடைபெற்றது.

அனர்த்த பாதுகாப்பு செயலமர்வின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் ஈடன் தோட்ட விடுதி, தம்புள்ள எனுமிடத்தில் ஆரம்பமானது.

இனாமாலுவ ஈடன் கார்டன்ஸ் விடுதியில் தீயணைப்புப் பயிற்சியை முன்னாள் விமானப் படை அதிகாரி மனோஜ் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (90)

# முரசின் இன்றைய பலன்



(21.09.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஐய வருஷம் புரட்டாதி மாதம் 05 ஆம் திகதி.
துவாதசி / மரணயோகம்.
ஆயிலிய நட்சத்திரம் மு.ப. 11.42 வரை. பின் மகம்.
இராகு காலம் 04.32 - 06.02 வரை. சுபநேரம் 09.02 - 10.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | போலியை நிஜமென்று நம்பிவிடல். பொறுமையைக் கடைப்பிடித்ததனால் முரண்பாடு அற்றுப்போய் சாந்திப் பிறத்தல் |
| ரிஷபம் | வெளியூர் மணமகனைச் சென்றடைய முடியாதபடி. மொழி தடையாக நிற்றல். கணக்குவழக்கில் தில்லு முல்லு காணப்படுதல். |
| மிதுனம் | மனைவியின் சொல்லுக்கு செவிமடுத்ததால் பிரச்சினைகளில் இருந்து தம்பித்தல். சுற்றுப்புறுச்சூழல் டெங்கு பரவசாதகமாக இருந்ததால் அபாராதம் விதித்தல். |
| கடகம் | வாகனம் பொறுத்தகட்டத்தில் ரகளை செய்ததால் நிகழ்ச்சிக்கு உரிய வேளை சமூகம் கொடாது விடல். அநாமதேய நபர்கள்இரவு நேரத்தில்நடமாடுவதைக்கண்டு அச்ச மடைதல். |
| சிம்மம் | பொருத்தப்பாடு இல்லாத ஜாதகத்தினால் திருமண நிச்சயார்த்தம் கைவிடல். பிள்ளைகளின் பிழையான நடவடிக்கைகளை கண்டிக்க முயன்றவேளை கவின்சுமுக நிலை அற் றுப்போதல். |
| கன்னி | உணவுக்கட்டுப்பாட்டை பிசகாமல் மேற்கொண்டதால் நோயின ஆதிக்கம் குறைவடைதல். ஏழரைச்சனி இருந்தாலும் வியாழசுகம் உள்ளதால் வெளியூர் பயணத்திற்கு ஏற்பாடு செய்தல். |
| துலாம் | இடைத்தங்கல் நாட்டினின்றும் விரும்பிய நாட்டை சென்றடைய சகோதரர் உதவிசெய்தல். பணியகத்தில் திறமை காரணமாக மேலதிக பணிச்சுமை ஏற்றுக் கொள்ளல். |
| விருச்சிகம் | தொழிலில் போட்டி நிலவுதல். ஏற்றவரனைத் தேட முயற்சி எடுத்தல். சுவீப் அதிர்ஷ்டம் ஏற்படல். |
| தனுசு | தொழிலில் போதிய கரிசனை எடுங்கள். ஏற்றம் பெற வைத்தவரை உதாசீனம் செய்தல். |
| மகரம் | நெடுங்காலம் கைவிட்டிருந்த காணிக்குச் சென்றவேளை பிறர் குடியிருப்பது கண்டு அதிர்ச்சியுறல். கடவுச்சீட்டுப்பெற ஆவணங்களில்குறைபாடுகள்இருப்பது கண்டு வேதனைப்படல் |
| கும்பம் | திட்டம் அந்தமாதிரி இருந்ததினால் தொழிலில் ஏற்பட்ட தேக்கநிலை அற்றுப்போதல். திகதி தப்பிய பொருள் என அறியாது பெற்றுக்கொண்டதின் தவறினைப்பின் அறிந்து துயர்மேவுதல். |
| மீனம் | பத்துரூபாய் தட்டுப்பாட்டினால் வியாபாரம் சோபிக்காது மந்த நிலை அடைதல். நீண்டநாட்களாக கைக்கு வராத நிலுவையைப்பெற முறையீடு செய்ய விழைதல். |

# ஓய்வெடுத்தார் ஆசியாவின் ரெனிஸ் மங்கை

## முடிவை மதிப்பதாக சீன ரென்னிஸ் சங்கம் அறிவிப்பு



(பீஜிங்)

தீராத முழங்கால் பிரச்சினை காரணமாக ரென்னிஸ் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக சீன வீராங்கனை லினா அறிவித்துள்ளார்.

சீன ரென்னிஸுக்கு மட்டுமின்றி ஆசிய டென்னிஸுக்கே அடையாளமாக விளங்கி வந்தவர் லினா. 8 வயதில் பட்மின்ரன் துடுப்பை விடுத்து ரென்னிஸ் மட்டையைக் கையில் ஏந்திய லினா கடினமான உழைப்பின் மூலம் ஆசிய வீராங்கனைகள் யாருமே எட்டிப்பிடிக்க முடியாத உயரத்தை எட்டி அனைவரின் கவனத்தையும் தன்பக்கம் ஈர்த்தார்.

2004ஆம் ஆண்டில் சீனாவில் நடைபெற்ற போட்டியில் முதல் சர்வதேச ஒற்றையர் பட்டத்தை ருசித்த லினா, 2011ஆம் ஆண்டு பிரெஞ் ஓப்பன் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்று கிராண்ட்ஸ்லாம் போட்டியில் ஒற்றையர் பட்டம் வென்ற முதல் ஆசிய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார். அத்துடன் இந்த ஆண்டில் நடைபெற்ற அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியிலும் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டத்தை வென்று 2ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை தனதாக்கினார்.

32 வயதான லினா களத்தில் வெற்றிக்காக போராடியதை விட தனது வலது முழங்காலில் ஏற்பட்ட காயத்தில் இருந்து மீள கடுமையாக போராட வேண்டியிருந்தது. கறுப்பு பட்டையை அணிந்தபடி வலியை பொறுத்துக்கொண்டு ஆடி வந்த லீ நாவால் தனது காயத்தை கடைசி வரை வெல்ல முடியவில்லை. உலக தர வரிசையில் 6ஆவது இடத்திலிருக்கும் லினா கடந்த யூன் மாதம் நடைபெற்ற விம்பிள்டன் போட்டியில் தோல்வி கண்ட பின் காயத்தின் கடுமையால் எந்த போட்டிகளிலும் கலந்து கொள்ளவில்லை. உலக தர வரிசையில் அதிகபட்சமாக 2ஆவது இடத்தை பிடித்த பெருமையும் லீநாவுக்கு உண்டு.

இந்த நிலையில் ரென்னிஸ் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக லினா நேற்று முன்தினம் முறைப்படி அறிவித்திருக்கிறார்.

இது குறித்து லினா தனது பேஸ்புக் பக்கத்தில் கூறியிருப்பதாவது: எனது முழங்காலில் ஏற்பட்ட காயம் எனக்கு பல மாதங்களாக கடுமையான வேதனையை அளித்தது. அடிக்கடி ஏற்பட்ட காயத்தால் ரென்னிஸ் வீராங்கனைக்கு உரிய உடல் தகுதியுடன் என்னால் இருக்க முடியவில்லை. இதனால் கடைசியாக ரென்னிஸ் ஆட்டத்திலிருந்து விலகும் இந்த முடிவை எடுத்தேன். இது எனக்கும், எனது குடும்பத்துக்கும் சரியான முடிவாகும். அவுஸ்ரேலிய ஓப்பன் போட்டியில் அதிக வெப்பத்துக்கு மத்தியில் தொடர்ந்து 7 போட்டிகளில் வென்றதை விட இந்த ஓய்வு முடிவு மிகவும் கடினமானது.

ரென்னிஸ் உலகை சேர்ந்த நிறைய பேருக்கு எனது ரென்னிஸ் வாழ்க்கை பிரச்சினைக்குரிய வலது முழங்காலை பொறுத்தது என்பது தெரியும். நான் முழங்காலில் கறுப்பு பட்டை அணிந்து களம் இறங்குவதால் அது எனது ரென்னிஸ் அடையாளமாகி விட்டது. காயம் எனது வாழ்க்கையையே மாற்றி போட்டு விட்டது. 4 தடவை முழங்காலில் அறுவை சிகிச்சை செய்ததுடன், ஒரு வாரத்தில் 100இக்கும் அதிகமான வலி நிவாரண ஊசி போட்டதால் ஏற்பட்ட வீக்கம் மற்றும் வலியால் கடினமான இந்த பாரத்தை நிறுத்தும் படி எனது உடல் என்னிடம் கெஞ்சியது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, லினாவின் ஓய்வு அறிவிப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள சீன ரென்னிஸ் சங்கம், லினாவின் முடிவை மதிப்பதாகவும், அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் ரென்னிஸ் வெற்றிகளின் மூலம் நாட்டுக்கு பெருமை சேர்த்ததற்காக லினாவுக்கு நன்றியும் தெரிவித்திருக்கிறது.

ஓய்வு அறிவித்த லினாவுக்கு, விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்), கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்), கிம் கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்), அனா இவானோவிச் (சேர்பியா) உட்பட ரென்னிஸ் உலகினர் பலரும் சமூக வலைத்தளம் மூலம் புகழாரம் சூட்டியிருக்கின்றனர்.

இதேவேளை, லினா ஓய்வு குறித்து சுவிட்சர்லாந்தின் ரென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ் கூறுகையில், லினா ஓய்வு பெற்றது, சீனாவுக்கும், உலக ரென்னிஸ் அரங்கிற்கும் சோகமாக நாள். இவருடன் இணைந்து விளையாடிய தருணங்கள் என்றும் என் மனதில் நிலைத்து நிற்கும் என்றார்.



## துப்பாக்கி சுடுதல் போட்டி சீனா, இந்தியாவுக்குத் தங்கம்

(இன்சான்)

ஆசிய விளையாட்டு விழாவின் முதல் நாள் போட்டியில் சீனா, இந்தியாவுக்கு துப்பாக்கி சுடுதல் போட்டியில் தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.


தென் கொரியாவின் இன்சான் நகரில், 17ஆவது ஆசிய விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான துப்பாக்கி சுடுதல் தனிநபர் 50 மீற்றர் பிஸ்டல் பிரிவு தகுதிச் சுற்றில், 559 புள்ளிகள் பெற்ற இந்தியாவின் ஜித்து ராய் 7ஆவது இடம் பிடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இறுதிப் போட்டியில் அசத்திய ஜித்து ராய் 186.2 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். இதன்மூலம் 17ஆவது ஆசிய விளையாட்டில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமை பெற்றார்.

பெண்களுக்கான துப்பாக்கி சுடுதல் போட்டியில் சீனாவின் மெங்யுவான் ஜாங் 202.2 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், தென் கொரியாவின் ஜீஹே ஜங் 201.3 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

# தடம் மாறியது வாழ்க்கை



(ஹமில்டன்)

நியூசிலாந்து அணியுடன் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்றால் மற்ற நாட்டு அணிகள் அந்த அணியை கண்டு பயப்படுகின்றனவோ இல்லையோ அந்த அணியின் சகலதுறை வீரர் கிறிஸ் கெய்ன்ஸுக்கு நிச்சயம் பயப்படும். அவரது துடுப்பாட்டம் சரியான நேரத்தில் அணியின் வெற்றிக்கு கைகொடுக்கும். அசைக்க முடியாத அதிரடி வீரராக அணியை வெற்றிப்பாதைக்கு திருப்பும் திறன் எப்போதுமே கெய்ன்ஸுக்கு உண்டு.

1970ஆல் நியூசிலாந்தின் மார்ல்ப்ரோவில் பிறந்த கிறிஸ் கெய்ன்ஸ். இளம் வயதிலிருந்தே கிரிக்கெட் மீது மிகுந்த ஆர்வமுடையவர். அவர் அணிக்கு விளையாடவந்த வருடம் 1989 இதிலிருந்து அவர் ஓய்வு பெற்ற 2004ஆம் வருடம் வரை அணியில் நட்சத்திர வீரராகவே வலம் வந்தார் கிறிஸ் கெய்ன்ஸ். உலகத்தின் சிறந்த சகலதுறை வீரர் என வர்ணிக்கப்பட்ட கிறிஸ் கெய்ன்ஸுக்கு ஐ.சி.சி விஸ்டன் விருது வழங்கி கௌரவித்தது.


இவ்வளவு பெருமை மிக்க கிறிஸ் கெய்ன்ஸின் தற்போதைய நிலை என்ன தெரியுமா? சொன்னால் நம்ப முடியாது, அதிர்ச்சி அளிக்கும் அளவுக்கு உள்ள செய்தி தான் அது. கிறிஸ் கெய்ன்ஸ் தற்போது ஒரு பேருந்து நிலையத்தை சுத்தம் செய்யும் வேலையையும், மணிக்கு 17 டொலர் என்ற விகிதத்தில் ட்ரக் சாரதியாகவும் வேலை செய்து வருகிறார் என்பது தான்! அதுமட்டுமின்றி 44 வயதான இவரை தற்போது இங்கிலாந்து அதிகாரிகள் சூதாட்டம் குறித்து விசாரித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது நிலை குறித்து கருத்து தெரிவித்துள்ள சக வீரரான டியோன் நாஷ், அவரது நிலை எனக்கு வருந்ததக்கதாக உள்ளது, இந்த நிலையில் இருக்கும் அவரை பார்க்கவே சங்கடமாக உள்ளது. அவருக்கு எங்களால் முடிந்த உதவியை செய்வோம். அவர் ஒரு சம்பியன், அவர் இதிலிருந்து விரைவில் மீண்டுவருவார் என்று கூறியுள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த கிறிஸ் கெய்ன்ஸின் மனைவி மெல் க்ராஸர் அவருக்கு வேறு வழியில்லை அவர் இதனை சந்தித்து தான் ஆக வேண்டும், நாங்கள் இப்போது சொந்த வீட்டில் கூட இல்லை வாடகை வீட்டில் தான் இருக்கிறோம் என்று கூறியுள்ளார்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 3000ஓட்டங்கள் மற்றும் 200 விக்கெட்டுக்களை வீழ்த்திய கிறிஸ் கெய்ன்ஸ் உலகின் சிறந்த சகலதுறை வீரராக ஓய்வு வரை கருதப்பட்டார். வண்டி ஓட்டி வாழ்க்கையை நடத்தும் இந்த சகலதுறை வீரரின் வாழ்க்கையில் சோகத்திலிருந்து மீண்டு வர அவரது இரசிகர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

# வில்லியம்ஸன் சதம்; வென்றது டிஸ்டிரிக்ட்ஸ்




மழையால் பாதிக்கப்பட்ட சம்பியன்ஸ் லீக் ருவெண்ரி-20 போட்டியில், வில்லியம்சன் சதம் அடித்து கைகொடுக்க, நார்த்தர்ன் டிஸ்டிரிக்ட்ஸ் அணி 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில், டக்வொத் லுயிஸ் முறைப்படி கேப் கோப்ராஸ் அணியை வீழ்த்தியது. இந்தியாவில், 6ஆவது சம்பியன்ஸ் லீக் ருவெண்ரி-20 தொடர் நடைபெற்று வருகின்றது. ராய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பி பிரிவு லீக் போட்டியில், நியூசிலாந்தின் நார்த்தர்ன் டிஸ்டிரிக்ட்ஸ், தென்னாபிரிக்காவின் கேப் கோப்ராஸ் அணிகள் மோதின. முதலில் ஆடிய டிஸ்டிரிக்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில்லியம்ஸன் 49 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 207 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கேப் கோப்ராஸ் அணி 7.2 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து மழை நீடித்ததால், போட்டியை தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதனையடுத்து டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நார்த்தர்ன் டிஸ்டிரிக்ட்ஸ் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. வில்லியம்ஸனம் ஆட்ட நாயகன் விருது வென்றார்.

## மலிங்காவுக்கு சத்திர சிகிச்சை

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லலித் மலிங்க இடது காலில் ஏற்பட்டுள்ள உபாதைக்கு சத்திரசிகிச்சை செய்து கொள்வதற்காக அவுஸ்திரேலியாவுக்கு நேற்று பயணமானார்.

இந்தநிலையில் அவரால் 16 வாரங்களுக்கு போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக 2015 உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே அவரால் பயிற்சிகளில் ஈடுபட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் 2015 பெப்ரவரி 14ஆம் திகதி அவுஸ்ரேலியாவிலும் நியூசிலாந்திலும் ஆரம்பமாகின்றன. எனவே உலக கிண்ணப்போட்டிகளில் மலிங்கவின் பங்களிப்பு குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு முன் மலிங்க உடற்தகுதியை நிரூபிக்கக்கூடிய ஆற்றல் உள்ளவர். எனவே, நிச்சயமாக அவர் உலகக் கிண்ணத் தொடரில் பங்கு பற்றுவர் என்ற நம்பிக்கை எமக்கிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபையின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

CHAMPIONS LEAGUE TWENTY 20

## இன்றைய ஆட்டம்

**கோப்ராஸ் எதிர்**
**ஹோபர்ட் ஹரிகேன்ஸ்**
**இடம்: ஹைதராபாத் நேரம் :**
**மாலை 4 மணி**

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்**
**எதிர் லயன்ஸ்**
**இடம் : ஹைதராபாத் நேரம்**
**இரவு 8 மணி**

### தேசிய மட்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில்

# யாழ். மத்திய கல்லூரி – சாஹிரா இன்று யாழில் பலப் பரீட்சை



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி அணி முன்னேறியுள்ளது. அத்துடன் இறுதிப் போட்டி இன்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை பாடசால்லை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் அம்பாந்தோட்டை குங்கம விஜயபா தேசிய பாடசாலை அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி ஜெரோசனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்டது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெரோசன் 101 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 67, கப்டன் அலன்ராஜ் 99 பந்துகளை எதிர்கொண்டு 45, திரேசன் 24, கார்த்தீபன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லலன் மஹீல மூன்று, டிவின்ரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 215 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அம்பாந்தோட்டை குங்கம விஜயப்பா தேசிய பாடசாலை அணி ஆரம்பத்தில் தடுமாறியதுடன் வேகமாகவும் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இந் நிலையில் ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் லலன் மஹீல, சஜிந்த விமோட் ஜோடி பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. இந்த ஜோடியின் பல பிடிகளை யாழ். மத்திய கல்லூரி அணி கோட்டைவிட்டது. இருப்பினும் இந்த ஜோடி ஏழாவது விக்கெட்டுக்காக 51 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. ஒரு முனையில் கப்டன் லலன் மஹீல நிதானமாக ஆடியபோதிலும் மறுமுனையில் விக்கெட் சரியை குங்கம விஜயபா தேசிய பாடசாலை அணி வீரர்களால் நிறுத்த முடியவில்லை. நிறைவில் அம்பாந்தோட்டை குங்கம விஜயபா தேசிய பாடசாலை அணி 45.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கப்டன் லலன் மஹீல 72 பந்துகளை எதிர்கொண்டு 67, சஜிந்த விமோட் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அலன்ராஜ் மூன்று, கௌதமன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ் வெற்றியின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள அதேவேளை, பிரிவு இரண்டிற்கும் தகுதிபெற்றுள்ளது.

இதேவேளை, யாழ். மத்திய கல்லூரியில் இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் கல்முனை சாஹிரா கல்லூரி அணியை யாழ். மத்திய கல்லூரி அணி எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## விளையாட்டு செய்திகள்

# ஊரெழு றோயல், மயிலங்காடு ஞானமுருகன் உரும்பிராய் இந்துவில் இன்று மோதல்



ஊரெழு றோயல்



மயிலங்காடு ஞானமுருகன்

(உரும்பிராய்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஊரெழு றோயல் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் அணிகள் மோதவுள்ளன.

பின்தங்கியபாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக நிதி திரட்டும் நோக்கில் வடமாகாண டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இக் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

இதல் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் ஊரெழு றோய் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய றோயல் அணி கோல் மழை பொழிந்து அதன் இரசிகர்களை மெய்சிலிக்க வைத்தது. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஊரெழு றோயல் அணி 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய ஊரெழு றோயல் அணி ஐந்து கோல்களை அடுத்தடுத்து போட்டுக் கொண்டன. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் செயற்பட்ட உடுப்பிட்டி நவஜீவன் அணி ஒரு கோலை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது. நிறைவில் ஊரெழு றோயல் அணி 8-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஏற்கனவே நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை வீழ்த்தி மயிலங்காடு ஞானமுருகன் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. ஞானமுருகன், றோயல் அணிகள் மோதும் இறுதிப் போட்டி இன்றைய தினம் மாலை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# கிண்ணம் வென்றது இருதயராஜா

(மெலிஞ்சிமுனை)

தீவக கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி கைப்பற்றிக் கொண்டது.

தீவக கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் மெலிஞ்சி முனை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இருதயராஜா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும் சாவற்கட்டு மகாத்மா அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. முற்பாதி ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் இருதயராஜா அணி முதல் கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. பதிலுக்கு மகாத்மா அணிக்கும் கோல் அடிக்கும் வாய்ப்புகள் பல கைகூடியபோதிலும் இறுதி நேரத்தில் அந்த வாய்ப்புகளை கோட்டைவிட்டது. இறுதியில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

# ஆர்.டி.எஸ். அணியை வீழ்த்தியது ஞானவைரவர்

(அளவெட்டி)

அளவெட்டி மத்தி விளையாட்டுக்ழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் வலி. வடக்கு மென்பந்து சமரின் லீக் ஆட்டமொன்றில் அளவெட்டி ஞானவைரவர் அணி 54 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற லீக் போட்டியில் அளவெட்டி ஞானவைரவர் மற்றும் மல்லாகம் ஆர்.டி.எஸ். அணிகள் மோதின. முதலில் ஆடிய ஞானவைரவர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சபேசன் 45, பிரணவன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அஜித் மூன்று, ரமேஷ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 91 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மல்லாகம் ஆர்.டி.எஸ். அணி 14.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் அஜித் 10, நேசன் எட்டு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கானதீபன், வாஷிங்டன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இறுதிப் போட்டிக்கான அணிகள் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

**1971** ஏப்ரல் ஜே.வி.பி. கிளர்ச்சியின் 1971போது ஆயுதப்படைகளினால் கொல்லப்பட்ட அதன் உறுப்பினர்கள் தவிர, கைது செய்யப்பட்டவர்களையும் சரணடைந்தவர்களையும் கட்சியினர் கிளைப்பி விட்டிருந்தனர். இந்தப் பின்னணியில் அக்காரயாவில் ஜே.வி.பியினருக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு தடை செய்தார். அக்கட்சிகள் வெளியிட்டு வந்த "அத்த", "ஜனதின" தினசரிகளையும் தடை செய்தார். இருந்தது அவர்களது கிளர்ச்சி தோல்வி அடைந்திருந்தாலும். அவர்கள் மீது மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு ஒரு அனுதாபமும் ஆகர்சிப்பும் ஏற்பட்டிருந்தது.

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற முடியாமல் போனது ஏன்?

## 12

**- சுப்பராஜன் [வானவில் இதழ்]**



சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கூட்டரசாங்கம் புனர்வாழ்வுக்கு உட்படுத்தியது.

அதற்காக கிளிநொச்சியிலுள்ள அக்காராயன் குளத்தில் தனிமையான காட்டுப் பிரதேசத்தில் முகாம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த நேரத்தில் 1970 பொதுத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வீ.ஆனந்தசங்கரி கிளிநொச்சித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அப்பொழுது தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகி இருக்கவில்லை.

ஆனந்தசங்கரி முன்னர் 1965 பொதுத்தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்டிருந்தபோதும், 1970 இல் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த சிறிமாவோ தலைமையிலான அரசில் அப்பொழுது அங்கம் வகித்துக் கொண்டிருந்த சமசமாஜக் கட்சியில் மீண்டும் சேர்ந்து பிரதி அமைச்சர் பதவியொன்றைப் பெறப்போகிறார் என்ற ஒரு வதந்தியும் தமிழரசுக் கட்சியினர் கிளப்பி விட்டிருந்தனர்.

உருவாக்கப்பட்ட முகாமை சிங்களக் குடியேற்றம் என்றும், அதற்கு ஆனந்தசங்கரி துணை போகிறார் என்றும், அவரை ஒரு "துரோகி" என்றும் வசைபாடி கவிதையொன்றை எழுதிய தமிழரசுக் கட்சியின் ஆஸ்தானக் கவிஞர் காசி ஆனந்தன் (காத்தமுத்து சிவானந்தன்) அதை "சுதந்திரன்" பத்திரிகையில் பிரசுரித்திருந்தார்.

ஆனால் கிளப்பிவிட்ட புரளி போல அக்காராயனில் சிங்களக் குடியேற்றம் எதுவும் நடைபெறவும் இல்லை, ஆனந்தசங்கரி அரசுடன் இணையவும் இல்லை.

1977 பொதுத்தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அவர் ஆட்சியைப் பிடித்ததும் அதிரடியாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

முதலாவதாக, தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு எதிராக வன்செயலைக் கட்டவிழ்த்து விட்டார். பின்னர் அந்த வன்செயலை செய்தது இடதுசாரிக் கட்சிகள் என்று பொய்யாகக் குற்றஞ்சாட்டி, அக்கட்சிகளைத்

இரண்டாவதாக, இடதுசாரிக் கட்சிகளைத் தடை செய்துவிட்டு, ஜே.வி.பி தலைவர்களையும், அதன் உறுப்பினர்களையும் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்தார்.

(ஜே.வி.பி ஒரு இடதுசாரிக் கட்சி அல்ல என்பது அவருக்குத் தெரியும்) விடுதலை செய்யப்பட்ட ஜே.வி.பி தலைவர் ரோகண விஜேவீரவை ஜே.ஆர்.அரசில் நீதி அமைச்சராக இருந்த ரொனி டி மெலின் மனைவி வந்து சிறைச்சாலையிலிருந்து காரில் ஏற்றிச் சென்றதாகத் தகவல்கள் வெளியாகின.

ஜே.ஆரின் இந்த நடவடிக்கை ஜே.வி.பிக்கும் ஐ.தே.கவுக்கும் இருந்த ஏதோ ஒருவகை உறவைத் துலாம்பரப்படுத்தியது.

மூன்றாவதாக, சிறிமாவோவின் குடியியல் உரிமையைப் பறித்து அவரை அரசியல் அனாதையாக்கினார். ஜே.ஆர். தமக்குச் செய்த உதவிக்கு ஜே.வி.பியினரும் உடனடியாகவே கைம்மாறு செய்யத் தொடங்கினர்.

விஜேவீரவைத் ரோகண விஜேவீர, நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, "பண்டாரநாயக்க வம்சத்தின் முடிவு", "கொரகொல்லை வளவின் வீழ்ச்சி" என்ற தலைப்புகளில் சிறிமாவோ குடும்பத்துக்கு எதிராக பொதுக்கூட்டங்கள் நடாத்திப் பிரசாரம் செய்தார்.

ஐ.தே.க.வின் வேண்டுகோள் அல்லது ஆலோசனையின் பேரிலேயே விஜேவீர இந்த மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் என்ற அபிப்பிராயம் அப்பொழுது அரசியல் வட்டாரங்களில் நிலவியது.

மறுபக்கத்தில் ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி நாடு தழுவியரீதியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி

பற்றிப் பேசி வந்த நா.சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி நடைமுறையில் அதற்காக முயற்சிக்காததால், அக்கட்சியை நம்பியிருந்த இடதுசாரிக் கொள்கையுடைய தமிழ் இளைஞர்கள் இவர்களில் பெருவாரியானவர்கள் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் - அக்கட்சி மீது நம்பிக்கை இழந்திருந்தனர். ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின் அக்கட்சியின் தலைமை மீது கீழ்மட்ட அணிகளுக்கு நம்பிக்கையீனமும், குழப்பங்களும், பிளவுகளும் ஏற்பட்டிருந்தன.

ஜே.ஆர். அரசாங்கம் ஜே.வி.பி. தலைவர்களை விடுதலை செய்த பின்னர், அந்த இயக்கம் தமிழ் பகுதிகளிலும் தனது வேலைகளைச் செய்ய ஆரம்பித்தது.

அதற்கு ஒரு காரணம் விஜேவீர யாழ்ப்பாணச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நேரம் அவருடன் முரசுமோட்டையைச் சேர்ந்த சில கம்யூனிஸ்ட் தோழர்களும் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் விஜேவீரவுக்கு சாரம், துவாய், சவர்க்காரம் போன்றன கொடுத்து உதவியதுடன், தமிழும் கற்றுக் கொடுத்திருக்கின்றனர்.

எனவே அவர் விடுதலையாகி வந்து, யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஜே.வி.பி. நடாத்திய பொதுக்கூட்டத்திற்கு வந்தபோது, நேரடியாக முரசுமோட்டை சென்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தங்கத்துரை என்ற தோழரை அழைத்து வந்து கூட்ட மேடையிலும் அவரை ஏற்றி அறிமுகம் செய்ததுடன், தனக்கு உதவியதற்காக தமிழ் தோழர்களுக்கு பகிரங்கமாக நன்றியும் தெரிவித்தார்.

(தொடரும்)

இருந்தது அவர்களது கிளர்ச்சி ... குறிப்பாக இளைஞர்களுக்கு ஒரு அனுதாபமும் ஆகர்சிப்பும் ஏற்படுத்தியிருந்தது. தமிழ் இளைஞர்கள் மத்தியிலும் ஓரளவுக்கு ஜே.வி.பி மீது ஒரு ஈர்ப்பு ஏற்பட்டிருந்தது. அதற்குக் காரணம் அதுவரை காலமும் ஆயுதப் புரட்சி

# படிகள்: பத்தாவது ஆண்டுச் சிறப்பிதழ்

**- வெள்ளைக் கிருஷ்ணன் -**

அனுராதபுரத்தில் இருந்து பத்து ஆண்டுகளாக "படிகள்" வந்து கொண்டிருந்ததல்லவா, இப்பொழுது பத்தாவது ஆண்டுச் சிறப்பிதழ் வந்திருக்கு. இந்தச் சிறப்பிதழ் வழமையான இதழ்களைப் போலன்றி, வடிவத்திலும் பக்கங்களின் அளவிலும் சேர்க்கப்பட்டிருக்கின்ற படைப்புகளின் கனதியிலும் வேறுபட்டிருக்கிறது.

படிகளின் வழமையான சைஸில் இல்லாமல், பெரிய அளவில் 120 பக்கங்களில் இந்தச் சிறப்பிதழை உருவாக்கியிருக்கிறார்கள். இதழில் முதன்மையான கவனம் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸின் நேர்காணலுக்கே கொடுக்கப்பட்டிருக்கு. அட்டையிலும் அனஸே தெரிகிறார்.

அனஸ் கல்வியியலாளர். படைப்பிலக்கிய விமர்சகர். முஸ்லிம் சமூக அரசியல் தொடர்பாகச் சிந்திப்பவர். விவாதத்திற்கும் கவனத்திற்கும் உரிய பல விடயங்களைப்பற்றி வெளிப்படையாகத் துணிச்சலுடன் பேசுகிறார். அண்மைக்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் மீது நிகழ்த்தப்பட்டு வரும் இனவாத வன்முறைவை எப்படி எதிர்கொண்டு தணிக்க முடியும் என்பதைப்பற்றி அனஸ் மிகத் தெளிவாக விளக்குகிறார்.

இது தவிரவே இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்துக்குரிய பிரச்சினை மட்டுமல்ல. முஸ்லிம்கள் கடைப்பிடிக்க வேண்டிய, சிந்திக்க வேண்டிய விடயம் மட்டுமல்ல, தமிழ்ச்சமூகத்துக்கும் உரியது. அனஸ் சொல்கிறார், "ஒரு சிறிய சம்பவத்தை பூதப்பியமாக உருவாக்க நாமே காரணமாகயிருப்பது அநியாயமாகும். இனவாதத் தீப்பொறி பரவிச் சூழல் மோசமடைந்தநிலையில் எங்களது போக்குகள், நடவடிக்கைகள் அதற்குத் தூபமிடுவதாக அமைய வேண்டியதில்லை. கனாமி போல திடீரென வந்து போகும் கலவரங்களைத் தவிர,

10, 20 வருடங்களாக சமூக, சமய, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் ஊடாக ஏற்படக்கூடிய மோதல்கள், அச்சங்கள், வேறுபாடுகள் என்பவற்றை முஸ்லிம் சமூகம் நிதானமாக ஆராய வேண்டும். எனெனில் இது முஸ்லிம் சமூகத்தின் அல்லது ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் முன்னேற்றத்தையும் இருப்பையும் பற்றிய பிரச்சினையாகும்.


நடப்பாகவும் புத்திக்கூர்மையாகவும் செயல்படுவதன் மூலமும் நல்லிணக்கத்திற்கான உச்சகட்ட வாய்ப்புகளை பெருமனதோடு ஏற்றுச்செயற்படுவதன் மூலமும் நாம் இந்த இனவாத அனல் பொறியை

மேலும், அனுராதபுரத்தின் கலை, இலக்கிய முயற்சிகள், ஈடுபாட்டாளர்கள் பற்றிய அன்பு ஜவஹர்ஷாவின் கட்டுரை, மீராபாரதியின் "பிரக்ஞை ஓர் அறிமுகம்" நூலைப்பற்றிய மன்சூர் ஏ. காதிரின் கட்டுரை, ஈழத்தின் குறுங்கவிதைகளைப் பற்றிய சி. ரமேஷின் கட்டுரை என்று ஒன்பது கட்டுரைகள் உள்ளன.

தோஸ்திற அர்சியலும் இரு ஆவணப் படங்களும் என்ற கட்டுரையில் மோஹ்சுவி இரண்டு ஆவணப்படங்களைப் பற்றி அறிமுகத்தைத் தருகிறார். ஒரு படம் நயனி தியாகராஜாவின் Shadeism. அடுத்தது, கென்யத் திரைப்பட இயக்குநர் Ng'endo Mukii இயக்கிய Yellow Fever.

தாய்மொழியின் செல்வாக்கு மாணவர்களின் பிரதான பாட அடைவுகளில் இலக்கிய ரீதியாக எப்படி உள்ளன என்பதைப்பற்றி றஹ்மத் நிஷா எழுதியிருக்கிறார். முருகபூபதி "பாரதியின் காதலி" என்ற கட்டுரையையும் "இஸ்லாமிய மற்றும் பெண்ணிலைவாத நோக்கில் பாலியல் சமத்துவம்" என்ற எம்.ஸி. ரஸ்மியின் கட்டுரையும் "கிழக்கிலங்கை முஸ்லிம் தேசத்தார் மாண்பு" என்ற தாஸிம் அகமதுவின் கட்டுரையும் உள்ளன.

ஜெஹிராவ ஸஹானா, நாச்சியாதீவு அபு நுஹா, எம்.எம். மன்சூர் ஆகியோர் சிறுகதைகளும் கருணாகரன், ரிஷான் ஷெரீப், ஜெம்சித் ஸமான், ஜஸிலா ஸ்ரீ, ஆதி பார்த்திபன், நாச்சியாதீவு பர்வீன், உநிஸார், நிந்தவூர் ஷிப்லி, வெலிகொணவ சுஹான், புலோலியூர் வேல்



பதவியொன்றைப் பெறப்போகிறார் என்ற ஒரு வதந்தியை தமிழரசுக் கட்சிகள் என்று பொய்யாகக் குற்றஞ்சாட்டி, அக்கட்சிகளைத் ஆயுதக் கிளர்ச்சி நாடு தழுவிய ரீதியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி நன்றியும் தெரிவித்தார்.

(தொடரும்)

# பல் சரியானால் பலதும் சரியாகும்



பல் மருத்துவ சிகிச்சை என்பது, சொத்தைப் பல், ஈறு கெடல், பல் ஆட்டம், பல் வலி போன்ற சிலவற்றையே சுற்றி இருக்கும் என்று பொதுவாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். பல் ஆட்டம் தந்தால் அதை எடுத்து விட்டால் சரியாகிவிடும், ஈறு கெட்டால் அதற்கென மருந்து மாத்திரை இருக்கிறது. பல் கூசினால் அதற்காகச் சில மருத்துவ பற்பசைகளை டாக்டர் பரிந்துரை செய்வார் என்பது பொதுவான பார்வை.

ஆனால் சரியான சத்துணவு உட்கொள்ளாத உடலில் பல்லும் பாதிக்கப்படும் என்று வலியுறுத்தும் பார்வை இன்றைய மருத்துவர்களிடம் உண்டு. உடல் உறுப்புகளில் மற்றவை பாதிப்புக்கு உள்ளாகும்போது பல்லும் ஈறும் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதாகும்.

Septic Focus என்ற இந்த சித்தாந்தம் பொதுவாகக் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. ஒருவருக்கு உடலில் வேறு உறுப்புகளில் ஏதேனும் நோய் இருக்கலாம். அதற்கு எடுக்கப்படும் சிகிச்சை பலனளிக்காமல் இருக்கலாம். மற்ற உறுப்புகளின் நோய் காரணமாக அவருடைய பல்லும் பாதிப்புக்கு உள்ளாகலாம். பல் பாதிப்பை சரியான சிகிச்சை மூலம் குணப்படுத்திவிட்டால் மற்ற நோய்கள் தாமாகவே குணமாகிவிடுகின்ற வாய்ப்புகள் நிறைய உண்டு.

ஒருமுறை பல் தொடர்பான சிகிச்சைக்காக ஒரு பெண்மணி என்னிடம் வந்திருந்தார். அவருக்கு 50 வயதிருக்கலாம். முதுகு நன்றாகக் கூன் போட்டிருந்தது. நான் அவருக்குப் பல் சிகிச்சை அளித்து முழுவதும் குணப்படுத்தி அனுப்பினேன்.

பலரை நான் கண்டிருக்கிறேன்!"

('டாக்டர் பி.கே.பாஸ்கர்: மருத்துவம் - மனிதநேயம் அனுபவங்கள்' நூலில்)

# 'ஒரு புளியமரத்தின் கதை' முன்னுரையிலிருந்து...



தமிழ் இலக்கியத்தின் நாவல் மரபைத் திசைதிருப்பிவிட வேண்டுமென்றோ, உரு, உத்தி இத்யாதிகளில் மேல்நாட்டுக் களஞ்சியத்திலிருந்து கொஞ்சம் கொள்ளையடித்துத்தான் தீருவது என்று ஆசைப்பட்டோ, திட்டம் வகுத்தோ எழுதிய நாவல் அல்ல இது. தமிழ் அன்னைக்கு இதோ ஒரு புதிய ஆபரணம் என்று எண்ணியும் இதை எழுதவில்லை. எந்தக் கலைஞனும் தன் மொழியில் இல்லாததைத் தேடி அளிக்கவோ, இடைவெளிகளை நிரப்பவோ, இலக்கிய வளர்ச்சிக்குத் தோள் கொடுக்கவோ, மொழிக்குச் செழுமையூட்டவோ எழுதுவதில்லை. நவநவமாய் ஆபரணங்களைச் செய்து அன்னையின் கழுத்தில் சூட்டுவது அல்ல, தன் கழுத்திலேயே மாட்டிக்கொண்டு அழகு பார்க்கவே அவனுக்கு ஆசை.

கலைஞனின் சமூகப் பொறுப்புகளும் சுயநல உணர்ச்சிகளும் பெரிதும் மிகைப்படுத்தப்பட்டுவிட்ட காலம் இது. அவன் எந்த அளவுக்குச் சுயநலக்காரன், திமிர் பிடித்தவன், அரசாங்க அமைப்பின் எதிரி, அனைவரையும் திரணமென மதிக்கும் அகங்காரி, சகோதரத் தொழிலாளிகள் மீது தீராத பொறாமை உணர்ச்சியை அடைகாத்து வருபவன், சில வேளைகளில் எப்படி மனிதனிலும் கடை மனிதன் அவன் - இவை எல்லாம் மறந்து போய்விட்ட பாவனை காட்டும் காலம் இது. வெகுளிகளில் அவன் அக்கிர கண்ணியன், அவனால் சொந்தம் பாராட்ட முடியாத அர்ச்சனைகள் சொரியப்படுகிற போது அதையும் அவன் கேட்டுக் கொண்டுதான் இருப்பான். ஆமோதிக்க, உண்மை உணர்ச்சி அவனை உறுத்தும். மறுக்க, அவனுடைய 'புகழாசை விடாது...

இந்நாவலின் கதாபாத்திரங்களில் பெண்கள் மிகக்குறைவு. நம் தேச ஜனத்தொகையில் பெண்களுக்குரிய வீதாசாரமான பிரதிநிதித்துவம் ஏகதேசமாய்க்கூட இந்நாவலில் அளிக்கப்படவில்லை. ஏதோ அவ்வாறு நிகழ்ந்துவிட்டது. உண்மையில் ஒரு பெண் கதாபாத்திரத்திற்கு நிறையப் பங்கு அளிக்கவே உத்தேசித்திருந்தேன்.

1958இல் எங்கள் ஊரில் நான் விரும்பும் நாவலாசிரியர் ஒருவர் வந்து தங்கியிருந்தார். நானும் என் இலக்கிய நண்பரும் வெகுநேரம் ஆசையோடு அவருடன் பேசிக்கொண்டிருப்போம். பேச்சு அலுப்புற்ற வேளைகளில் அந்த ஹோட்டலின் இரண்டாவது மாடியில் நின்று பஜார் இயக்கங்களை வேடிக்கை பார்த்தபடி இருப்போம். அங்கிருந்து நேராகக் கீழே பார்த்தால் சினிமா தியேட்டரை ஒட்டி பொரிகடலைக்காரி ஒருத்தி உட்கார்ந்துகொண்டிருப்பது தெரியும். மேலே இருந்து பார்க்கையில் முறத்தில் பொரிகடலைக் குவியல் மீது அவளுடைய சிரம் வெட்டி வைக்கப்பட்டிருப்பதுபோல் தெரியும்.

இந்தக் கோணத்தில் பார்க்க நேர்ந்ததால் அவள் என் மனசில் இடம்பெற்றாள். கொழகொழவென்று வெற்றிலைச்சாறு தளும்பும் வாயுடன், தலையில் கனகாம்பர மூட்டையுடன், பெரிய பொட்டுடன், மலிவான அலங்காரங்களுடன், செயற்கைக் கவர்ச்சிகளுடன், "இது என் தொழில் அல்ல; உப தொழில்" எனப் போடாமல் போடும் கோஷத்துடன், சிரிப்பும் வசையுமாக, கண்களால் ஆண்மையை அவ்வப்போது சீண்டியபடி இருப்பாள்.

அவளுக்கு இந்நாவலில் முக்கிய பங்கு அளிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஒரு அத்தியாயத்தில் அவளை அறிமுகப்படுத்தியும் வைத்தேன். ஐயப்பனின் காதலியாகவோ, சகோதரியாகவோ, மாமியாராகவோ பின்னால் வளர்த்திக் கொண்டு வரவேண்டுமென்று யோசித்திருந்தேன். அடித்துத் திருத்திக் கிழித்துப்போட்டுத் திரும்ப எழுதிய பக்கங்களின் அவஸ்தையில் அவள் எப்போது நழுவி வெளியே விழுந்தாள் என்பதே தெரியவில்லை...

இந்த நாவலின் முதற் பதிப்பைக் கொண்டுவந்தவர் தமிழ்ப் புத்தகாலயம் கண. முத்தையா அவர்கள். மேலட்டையில் ஆணும் பெண்ணும் கண்ணோடு கண் பார்த்துக் கொள்ளும் படத்தைத் தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டதை அவர் ஏற்றுக்கொண்டார். பின்னணியில் தாமரை பூத்த தடாகம் வேண்டாம் என்றும் சொல்லியிருந்தேன். நான்காவது பதிப்பு க்ரியா வெளியீடாக வந்தபோது நண்பர்களுடன் நாவலைப் படித்துப் பார்த்துத் திருத்தங்கள் செய்தேன். இன்னும் சில பிழைகள் இருக்கக்கூடும். ஒரு நாவலைச் செப்பனிடுவதற்கு முடிவில்லை.

இது என்னுடைய முதல் நாவல். நாவல் துறைக்கு இந்நாவல்வழி நான் அறிமுகமாக நேர்ந்தது எனக்கு ஏதேதோ வகைகளில் திருப்தியைத் தருகிறது.

படித்துப் பாருங்கள். இந்த நாவல் உங்களுக்குப் பிடிக்கலாம். பிடிக்காமலும் இருக்கலாம். சில நாவல்கள் நன்றாக இருக்கும். சில நாவல்கள் நன்றாய் இராது.

நான் இதைவிடவும் விரும்பும் நாவல் ஒன்றைப் பின்னால் எழுதக்கூடுமென்று தோன்றுகிறது.

- சுந்தர ராமசாமி

# பத்தாவது ஆண்டுச் சிறப்பிதழ்

விலை - 250.00 இலங்கை ரூபாய்கள்.

முகவரி - PADIHAL PUBLICATION, 52, THURUKKARAGAMA, KAHATAGASDIGILIYA

தொலைபேசி - 770888048, 718423459

# "குடுகுடுப்பைக்காரர்கள்"



- மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆய்வேட்டிலிருந்து





# ராஜினி, உண்மையில் எங்கள் காலத்தில் வாழ்ந்த ஒரு வீராங்கனை!

■ தயாபால திரணகம

**நல்லூரில் உள்ள அவர்களது குடும்ப மயானத்தில் 25 செப்ரெம்பர் 1989இல் ராஜினி அடக்கம் செய்யப்பட்டாள். எனது இரண்டு சிறு பெண் மக்களின் கரங்களைப் பிடித்தவாறே நான் நடந்தேன். என் வாழ்க்கையில் மிகவும் கடினமான வலி நிறைந்த துயரமான நடையாக அது இருந்தது.**

நான் ராஜினியை சந்தித்தது செப்ரெம்பர் 1976இல், அப்போது மாணவர்களின் அமைதியின்மை இலங்கையின் பல்கலைக் கழகங்களில் வேகமாக பரவிக்கொண்டிருந்தது மற்றும் ஒரு புதுப்பிக் கப்பட்ட போர்க்குண செயற்பாடு பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இருந்தது. அவை அசாதாரணமான காலங்கள்.

நான் சில நீண்ட வருடங்களை சிறையில் கழித்தபின் அப்போதுதான் 1976இல் இரண்டாவது முறையாக சிறையை விட்டு வெளியில் வந்திருந்தேன். கிறிஸ்தவ மத பின்னணியை சேர்ந்தவரும் மற்றும் தீவிர அரசியல் சிந்தனையை கொண்டவருமான ராஜினி என்கிற ஒரு இளம் தமிழ் பெண், கொழும்பு மருத்துவபீடத்தில் உள்ள மருத்துவ மாணவர்களிடையே அப்போது செல்வாக்கை செலுத்தத் தொடங்கியிருந்தார்.

நீதிக்கும் மற்றும் ஜனநாயகத்துக்குமான அவரது தாகம், தமிழர்களுக்கு எதிரான வரலாற்று ரீதியான பாகுபாடு மற்றும் வன்முறைகள் காரணமான அரச அடக்குமுறைக்கு எதிரான அடையாளமாக இருந்தது, இந்த நேரத்தில் நான் ஒரு பல்கலைக்கழக கல்வியாளனாக மாறியிருந்தேன்.

1977 ஆகஸ்ட் 28 இல் கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் நடப்பதற்கு மத்தியில் கொழும்பில் வைத்து எந்த வித விழாவும் இன்றி நாங்கள் திருமணம் செய்து கொண்டோம். நாங்கள் திருமணம் செய்த அன்றைய தினம் இரத்மலானயில் உள்ள எனது சிங்கள நண்பி ஒருவரின் வீட்டில்தான் தங்கியிருந்தோம்; அந்த அயலில் இருந்த தமிழ் குடும்பங்கள் சில முந்தைய தினம் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்ததால், எங்களைப் பாதுகாப்பதற்காக அந்த சிநேகிதியின் தந்தை தனது துப்பாக்கியை தயாராக வைத்துக் கொண்டு இரவு முழுவதும் துங்காது கண்விழித்துக் காவலிருந்தார்.

எங்கள் திருமணம், இரண்டு இனங்களைச் சேர்ந்த, சமுதாய ரீதியாக, அரசியல் ரீதியாக மற்றும் கலாசார ரீதியாக வேறுபட்ட இரண்டு நபர்களை, மானிட புரிந்துணர்வு மற்றும் காலத்தால் அசைக்க முடியாத ஆழமான காதல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட உறவுமுறையால் ஒன்று சேர்த்தது. என்மீது தான் கொண்ட காதல் சமுத்திரம்போல வெகு ஆழமானது என்று ஒருமுறை ராஜினி எனக்கு எழுதியிருந்தாள்.

சமூக ரீதியாக நாங்கள் இரண்டு சமூக வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். ராஜினி யாழ்ப்பாண நடுத்தர வர்க்க வளர்ப்பில் இருந்து வந்தவர். நான் தென்பகுதி வறிய விவசாய குடும்பத்தால் வளர்க்கப்பட்டவன் மற்றும் எனது வாழ்க்கைக்காக எனக்குத் திறந்துள்ள ஒரே வாய்ப்பு கல்வி மட்டும்தான். நான் சிறுவனாக இருந்தபோது எனது பாடசாலைக்கு வெறும் காலுடன் மைல் கணக்கில் நடந்து சென்றுள்ளேன். எனது பால்யம் ஏழ்மை மற்றும் இடர்பாடு நிறைந்தது.

எப்படியிருந்தாலும் ராஜினிக்கு தனது நடுத்தர வர்க்கத் தரப் பின்னணிக்கும் மற்றும் எனது சமூகத் தரத்துக்கும் எதிர் எதிரான வேறுபாடுகள் பற்றிய எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. தனது சொந்த நடுத்தர வர்க்க குடும்ப அங்கத்தினர்களிடையேயும் மற்றும் வெளியாட்கள் இடையிலும் நான் நடுத்தர வர்க்க தரங்களை அனுசரித்து நடப்பதில்லை என்று அவர்களின் கவனத்துக்கு தென்பட்டபோது என்னைப் பாதுகாக்க ராஜினி வாதாடுவாள்...

மார்க்சிய - லெனினிய மற்றும் மாவோயிச அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களில் கிட்டத்தட்ட ஒரு மதத்தின் மீதுள்ள நம்பிக்கையே எனக்கு இருந்தது. ஏனைய நாடுகளில் இடம் பெற்ற வெற்றிகரமான புரட்சிக் கதைகளை சமூகநீதியின் ஒரு நடைமுறை உதாரணமாக இலங்கையில் பிரயோகிக்க ராஜினி விரும்பினாள். இந்த நடைமுறை காரணமாகக்கூட தனது சொந்த அரசியற் பயணத்தில் ராஜினி புலிகளுக்கு நெருக்கமானவளாக மாறினாள்.

பின்னர் அவள் புலிகளை விட்டு விலகியபோது, அவளது அரசியல் வாழ்க்கையில் அவளது சக்தி மற்றும் உணர்வுகளை மனித உரிமைகள் பக்கம் திருப்புவதற்கு இதே வழியில் இந்த நடைமுறையின் அடிப்படைக் கருத்தியல் நம்பிக்கை அவளுக்கு பயனுள்ளதாக அமைந்தது.

ராஜினியை சந்தித்தபோது, நான் அப்போதுதான் சிறையிலிருந்து வெளியே வந்திருந்தேன், என்னில் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதையின் தழும்புகள் என் உடல் முழுவதும் சிதறிக் கிடந்தன, மற்றும் நான் ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்ள மட்டுமல்லாது, மீண்டும் ஒரு வாழ்க்கையை வாழுவோம் என்றுகூட எதிர்பார்த்தது கிடையாது.

என்னை ஏற்றுக் கொள்வதற்காக ராஜினி அசாதரணமான துணிவை வெளிப்படுத்தினாள். அதற்காக அவளது குடும்பத்தினருடன் அவள் யுத்தம் நடத்த வேண்டியிருந்தது.

எனது அரசியல் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக நான் ஒரு நாள் அவளை விட்டுப் போய்விடுவேன் என்பதை ராஜினி ஏற்றுக் கொண்டிருந்தாள். ஒருக்கால் நான் குடும்பத்தை விட்டுப் போய்விட்டால் நாங்கள் மீண்டும் சந்திப்பதில்லை என்பதும் கூட ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

மற்றும் எங்களது தனிப்பட்ட தேவைகள் மற்றும் இலட்சியங்கள் யாவற்றையும் அரசியல் நீதி மற்றும் ஏழை மக்களின் விடுதலை என்பனவற்றுக்காக ஒடுக்கிக் கொள்ள வேண்டும் என்றும் முடிவாகியிருந்தது.

என்னுடைய பிரசன்னம் இல்லாமலே ராஜினி தனது குழந்தைகளுடன் வாழ்க்கையை ஒரு நிலைக்கு கொண்டு வருவதுடன் தானே சொந்தமாக அவர்களை வளர்ப்பது என்கிற தீர்மானத்திலும் உறுதியாக இருந்தாள்.

1989 செப்ரெம்பர் 22இல் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்துள்ள ஒரு அவசரமான செய்தியை பெற்றுக் கொள்வதற்காக கொழும்பில் உள்ள ஒரு மறைவிடத்துக்கு வரும்படி எனக்கு கூறப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஒரு தூதுவருடன் எனது நண்பர்கள் எனக்காகக் காத்திருந்தார்கள், இந்த தூதர் முதல் நாள் ராஜினியுடன் சேர்ந்து மதிய உணவை உண்டவர். அந்தப் பெண் தனது செய்தியை சொல்வதற்கு நேரத்தையோ அல்லது சொற்களையோ வீணாக்கவில்லை.

“உங்கள் மனைவி ராஜினி, நேற்று மாலை பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் ஒரு துப்பாக்கிதாரியால் சுடப்பட்டார். அந்த தாக்குதலில் அவர் மரணம் ஏற்படும் அளவிற்கு காயம்பட்டுள்ளார். உங்கள் குழந்தைகள் அவர்களது தாத்தா பாட்டியுடன் உள்ளனர்”

அந்தப் பெண், தானே ஆழமான அதிர்ச்சிக்கும் ஒரு துன்பமான நிலைக்கும் உட்பட்டிருந்தாள். முன்பின் தெரியாத ஒரு நபருக்கு ஒருபோதும் வழங்கமுடியாத மிகவும் கடினமான. செய்தியாக அத்தகைய குறுகிய காலத்தில் அத்தகைய குறுகிய வார்த்தைகளுடன் அவள் வழங்கிய செய்தி இருந்தது. ஒரு நம்பமுடியாத அசாதாரண வேகத்தில் எனது தலை சுற்றியதையும் நான் பேச்சற்று வாயடைத்து நின்றதையும் இப்போதும் என்னால் உணர முடிகிறது.

நல்லூரில் உள்ள அவர்களது குடும்ப மயானத்தில் 25 செப்ரெம்பர் 1989இல் ராஜினி அடக்கம் செய்யப்பட்டாள். எனது இரண்டு சிறு பெண் மக்களின் கரங்களைப் பிடித்தவாறே நான் நடந்தேன், என் வாழ்க்கையில் மிகவும் கடினமான வலி நிறைந்த துயரமான நடையாக அது இருந்தது.

அவளுடன் சேர்த்து எங்கள் குடும்பத்தின் மகிழ்ச்சிகரமான நாட்களும் புதைக்கப்பட்டு விட்டன மற்றும் எங்கள் குடும்பம் அவளுடைய பிரசன்னம் இல்லாமல் முன்னரைப்போல பழைய நிலைக்கு ஒருபோதும் திரும்பவேயில்லை. 20 நீண்ட வருடங்களாக அவளுடைய கல்லறைக்கு எங்களால் விஜயம் செய்ய இயலவில்லை. அவளுடைய பிள்ளைகள் தங்கள் தாய் இல்லாமலே ஒவ்வொரு நாளையும் கழித்தார்கள், அவர்களது ஈடு செய்ய முடியாத இழப்பை அவர்களுடனேயே கொண்டு நடந்தார்கள்.

போரினால் பெற்றோர்களை இழந்து வாடும் இலங்கையிலுள்ள ஏனைய சிறார்களுடன் அவர்களும் இணைந்து கொண்டார்கள். இதில் வஞ்சனை என்னவென்றால் இந்தப் போராட்டத்தில் சாகவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது ராஜினி இல்லை, அது நானாக இருந்திருக்க வேண்டும் குழந்தைகளை பாதுகாக்கும் தனது பங்கை அவள் ஏற்றுக் கொண்டிருந்தாள். ஆனால் எல்லாம் நேர்மாறாக நடந்து முடிந்துவிட்டது.

எங்கள் உறவின் ஆரம்பத்தில் எனது பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பை ஏற்பதற்காக எனது அரசியல் வாழ்க்கையை நான் முடித்துக் கொள்வேன் என்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை. இலங்கை அரசியலில் எனக்குள்ள தொடர்பு எனக்கு மரணத்தையே விளைவிக்கும் என நான் எண்ணியிருந்தேன். அது நடக்கவில்லை.

மாறாக தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காக ராஜினி தன் உயிரையே ஈந்தாள் மற்றும் நான் எனது பிள்ளைகளுக்காக உயிர் வாழவேண்டியவனாக இருந்தேன். அவர்கள் சுதந்திரமானவர்களாக மாறும்வரைக்கும் நான் அவர்களை வளர்த்தேன்.

ஆனால் எனது பாராட்டு யாவும் ராஜினிக்குச் சேரவேண்டியதே. அவர்களுடைய ஆரம்ப வருடங்களில் ராஜினி ஏற்படுத்திய உறுதியான அடித்தளம் அந்தப் பணியை செவ்வனவே முடிக்க எனக்கு உதவியாக இருந்தது.

இந்த நிலை எனது பிள்ளைகள் அல்லது எனது குடும்பத்துக்கு மட்டும் பொதுவானது அல்ல. அரசியல் நிலைமையின் அத்தகைய வியத்தகு உருமாற்றங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் போர்க்குண செயற்பாடுகள் இடம்பெற்ற குறுகிய காலத்தில் தமிழ் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தவர்களையும் தாக்கியுள்ளது.

ராஜினி திரணகம உண்மையில் எங்கள் காலத்தில் வாழ்ந்த ஒரு வீராங்கனை மற்றும் இலங்கையை மூடியிருந்த தமிழ் துயரத்தின் மறக்கமுடியாத அடையாளச்சின்னம்.

கலாநிதி ராதிகா குமாரசாமி ஒருமுறை குறிப்பிட்டபடி “இலங்கைத் தமிழர்களாகிய தனது மக்களைப் பற்றி அவரிடம்(ராஜினியிடம்) ஒரு கருத்து இருந்தது. அவர்கள் சமாதானம் மற்றும் கண்ணியத்துடன் வாழ்ந்து ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரத்தையும் அனுபவித்து மகிழவேண்டும் என்று ராஜினி கனவுகண்டார். அடக்குமுறை மற்றும் கொடூரத்தனம் என்பனவற்றின் அனைத்து வடிவங்களுக்கும் எதிராக எழுந்து நின்ற அவர், அச்சத்துடன் வாழ்ந்து கொண்டு, சுய மரியாதைக்காக போராடும் சமூகத்திற்கு ஒளி கொடுக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார். இலங்கையில் சுதந்திரத்துக்காகப் போராடும் ஒவ்வொருவராலும் ஒருபோதும் மறக்க முடியாத தெய்வீக வடிவம் ராஜினி”.

# மீனவர் பிரச்சினையை தீர்க்க முன் நிற்பவர் சந்திரகுமார் எம்.பி.

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கடற்றொழில் கிராமங்களான கிளாலி, அறத்திநகர், புலோப்பளை, சங்கத்தார்வயல், பிரதேசங்களில் மீள்குடியமர்ந்த கடற்றொழிலாளர்களின் தொழில் இடர்பாடுகளை களைவதற்கும் தொழில் சார் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் எப்போதும் முன்னுரிமையளித்து வந்துள்ளார் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

கிளாலி கடற்கரையில் நடைபெற்ற பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கடற்றொழில் தின விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று கிளாலி துறைமுகத்தில் சுதந்திரமாக தொழிற் கலங்களை நங்கூரமிடவும், படகோட்டப் போட்டிகளை நடாத்தவும் முடிந்துள்ளது. ஆனால், இதனைப் பெறுவதற்கு உங்களுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண ஆகியோரின் முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை கடற்றொழிலாளர்கள் நன்கு அறிவார்கள்.

கடல்வளங்கள் கொள்ளையிடப்படுகின்றன. றோலர் மீன்பிடி, தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் வெடிபொருட்பாவனை என்பவற்றால் கடல்வளங்கள் முற்றாகவே அழிவடையும் அபாயத்தை எட்டியுள்ளன. இது பற்றிய சுயநலமற்ற எதிர்கால நோக்கிலான சமூக விழிப்புணர்வு கடற்றொழிலாளர்களிடையேயும், மக்களிடையேயும் ஏற்படுத்தப்பட வேண்டும் இதன்மூலமே பலமானதும் வளமானதுமான ஒரு எதிர்காலத்துக்கு அடித்தளமிடமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் கடற்போட்டிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி. ஜெயராணி பரமோதயன் ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் குருஸ மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கிருஸ்ணகுமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் இன்று நர்த்தனாஞ்சலி நடன நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத் துணைத் தூதரகமானது இந்திய அரசின் கலாசார அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாணத்தில் கடந்த மூன்று வருடங்களாக கலை நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. உள்ளூர் நுண்கலை மாணவர்களுக்கும் மற்றும் கலைஞர்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கில், இவ்வருடமும் செப்ரெம்பர் 2014 முதல் பெப்ரவரி 2015 வரையுள்ள காலப்பகுதியில் நான்கு கலை நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது. பாரம்பரிய சாஸ்த்திரீய நடனம் மற்றும் இசையை வடமாகாணத்தில் பயிற்றுவிக்கும் நுண்கலை நிறுவனங்களூடாக் இவ்வகையான கலை நிகழ்வுகளை யாழ். இந்திய துணைத்தூதரகம் ஒழுங்கு செய்துள்ளது.

யாழ். இந்தியதுணைத்தூதரக அனுசரணையுடன் வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியினால் ஆற்றுகை செய்யப்படும் மாபெரும் நடன நிகழ்ச்சி வவுனியா நகர சபை, புதிய கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை இடம்பெறவுள்ளது. இக்கலை நிகழ்வில் நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரியின் 100 மாணவர்கள் வரை நடன அளிக்கை செய்யவுள்ளனர்.

நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சாஸ்த்திரீய நடனம் மற்றும் இசை வகுப்புகளை பயிற்றுவித்து வருகின்றது. நிதி வசதியற்ற ஏழைமாணவர்களுக்கு இலவசமாக இசை, நடன வகுப்புகளை பயிற்றுவித்தும் வருகின்றது. மேலும் இக் கல்லூரி வடமாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் பல கலை நிகழ்வுகளை நடாத்தியும் வருகின்றது.

# முதியோரை பாதுகாத்தல் விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

2014 ஆம் ஆண்டிற்கான சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது முதியோரது உரிமைகளை பாதுகாத்தல், மேம்படுத்தல் தொடர்பாக பிராந்தியங்கள் தோறும் பல செயலமர்வுகளை நடாத்த தீர்மானித்துள்ளது.

அந்தவகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம் அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் சமூகஅமைப்புக்களின் பிரதிநிதிகள், முதி யோர் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் (விசேடமாக முதியோரது நலன் பேணுவதில் அதிக பங்கு வகிப்பவர்கள்) என்போரை உள்ளடக்கி அரை நாள் செயலமர்வு ஒன்றை கைதடி அரச முதியோர் இல்லத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி (வியாழக்கிழமை) மு.ப. 9.30 மணியளவில் நடாத்த தீர்மானித்துள்ளது.

முதியோர் தொடர்பான சமூகப்பாதுகாப்பும் சமூக கவனிப்பும், வயது முதிர்தலின் சுகாதார நோக்கு, முதியோர் தொடர்பானசட்டங்கள், போன்ற கருப்பொருள்களில் இச்செயலமர்வு நடை பெறவுள்ளது.

## விவசாய சம்மேளன பொதுக்கூட்டம்

வரணிவடக்கு விவசாய சம்மேளனப் பொதுக்கூட்டம் நாளை மு.ப. 11 மணியளவில் தம்பான் விநாயகன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளதாக வடவரணி விவசாய சம்மேளனத்தின் செயலாளர் க.தியாகராசா அறிவித்துள்ளார். மேலும் 2014-2015ஆம் ஆண்டுகளுக்கான உரமானிய விண்ணப்பப்படிவம் தற்போது வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(150)



காரைநகர் வலந்தலை அத்திபுரம் கந்தசுவாமி ஆலய திருவிழாவில் பஜனை வழங்கிய பக்திப்பாவேந்தன் கைலாயபிள்ளை திருச்செல்வம் குழுவினரை முதலாம் திருவிழா உபயகாரர்கள் பொன்னாடைபோர்த்தி கௌரவித்தனர். (50)

# பதிவிறக்கப் பெட்டகம்

நாம் என்னவாக இருக்கிறோம் என்பதைக் கண்டறிவதல்ல இன்று நமது குறிக்கோள். மாறாக நாம் என்னவாக இருக்கிறோமோ அதை மறுப்பதுதான். நவீன அதிகார அமைப்பின் "இரட்டைத் தளையாக" செயல்படும் தனித்துவப்படுத்தல் மற்றும் ஒட்டுமொத்தமாக்கல் என்பதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வது எப்படி என்பதை நாம் யோசித்து கண்டடைந்தாக வேண்டும்.

– மிஷேல் ஃபூக்கோ

வாழும்போதே கற்றுக்கொள்வதுதான் சுதந்திரமேயொழிய எதிர்காலத்தில் கிடைக்குமென்று நிகழ்காலத்தில் செத்து மடிவதல்ல.

– நோம் சோம்ஸ்கி

வேற்றுமையில் பிளவுண்ட சமூகத்தினிடையில் இணக்க மனப்பான்மை கொண்ட சமூகத்தை நிறுவ வேண்டுமெனில், வாழ்க்கையும் சமூகமும் ஒழுக்கமும் கட்டவிழ்ந்து விவஸ்தை கெட்டுக் கிடக்கும் நிலையில், அறிவு – நீதி சார்ந்த சொல்லாடல்கள் பரஸ்பரம் நெருங்கி வருவதும், அவை செயலாக்கத் தளத்தில் ஒன்று சேர்ந்து பங்கெடுப்பதும் அவசியமானது.

– கைபர் மாஸ்

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் பொருளாதார உறவுகளின் உருவத்தையும் செயலாக்க வேகத்தையும் அடியோடு மாற்றிவிட்டன. முந்தைய காலகட்டங்களில் முதலாளித்துவத்தின் நிழல்கூட சென்றடைய முடியாத இடங்கள் இன்று பன்னாட்டு முதலாளித்துவத்தின் ஆதிக்கப்பிடியில் சிக்கியுள்ளன. உதாரணமாக, விண்வெளி, கடல், இயற்கை என்று எங்குமே பன்னாட்டு முதலாளித்துவத்தின் அபாயகரமான நிழல் பரவிவிட்டது.

– ஃபிரெட்ரிக் ஜேம்ஸன்

ஏகாதிபத்தியம் எப்போது திடுக்கிட்டுப் போகும் எனில், தனது பொருட்களை வாங்க சந்தையில் ஆட்களற்றுப் போகும்போதுதான்.

– ழான் போத்ரியா

முன்பெல்லாம் மனித மூளையை ஒளிபெறச் செய்வதற்காக அறிவைத் தேடி அலைவது வழக்கம். இப்போதோ வணிகப் பொருளாதார முறையின்படி, அறிவைச் சுயநலத்திற்காக பயன்படுத்த, அதனை ஆற்றலுக்கான ஆயுதம்போல் பிரயோகிப்பதற்காக மட்டும் அறிவுற்பத்தி நடக்கிறது. இன்றைய யுகத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்கள் நிதானத்துடன் இலட்சியத்தின் புனிதத்தன்மையை அடைவதைவிட குறுக்குவழியில் சென்று உடனடியாக வெற்றிக்கான சாதனங்களைக் கண்டுபிடிப்பதில் முனைப்பாக உள்ளன. நாளைவரை காத்திருக்க மனிதனுக்கு இப்போது நேரமில்லை. – லியோ டார்ட்

தனி மனிதனை அரித்துத் தின்னும் பொறாமையை, அவன் தனக்கும் பிறரிடத்தும் மறைக்கும்போது அது சக மனிதர்களிடம் பரவியிருக்கும் ஒரு கூட்டுக் கனவாகி, அவர்களை இனவாதத்திற்கு இட்டு சென்றது. தங்களை குறித்து தாங்களே மகிழ்ந்திராத ஒடுக்கப்பட்ட ஜெர்மனியர்களுக்கு இந்த இனவாதம் ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. மந்தமான (maladroit) கிறித்துவ மாணவர்கள், சிந்திக்கத் தெரியாத விற்பனையாளர்கள் மற்றும் தப்புக் கணக்கு போட்ட தொழில் முனைவர்கள் யூதர்களின் தொடர்ந்த வளர்ச்சி குறித்து குற்றம் சொல்லிக் கொண்டே இருக்க முடியவில்லை. இது தார்மீக உணர்வுக்கு உவப்பானதாகவுமில்லை, தோல்வி குறித்த பயத்தை அதிகரிக்கவும் செய்தது. அதனால், தங்கள் பொறாமையையும், யூத-எதிர்ப்பையும், இன அவதூறாக மாற்றிக்கொண்டனர். இந்த இனவாதக் கோட்பாடு, தங்களைக் குறித்து சந்தேகமும், தாழ்வுணர்ச்சியும் கொண்டிருந்த பலவீனமான ஜெர்மானியர்களை, தாங்கள் ஒரு வலுவான மற்றும் உயர்ந்த அறிவுஜீவிகளாகக் கற்பனை செய்துகொள்ளும் கூட்டத்தினராக மாற்றியது. இனவாதம் என்பது பலவீனத்தால் உந்தப்பட்டு மந்தைக்குள் சென்று சேர்வதன்றி வேறல்ல.

– கொட்ஸ் ஆலி

உங்கள் கடந்தகால நிகழ்ச்சிகளில் நீங்கள் உங்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை மட்டுமே காண்கிறீர்கள். மனச்சாட்சி போடும் ஒவ்வொரு வரவு செலவுக் கணக்கையும் தன்னைப் பற்றிக் கழிவிரக்கம் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பமாக அந்த மனச்சாட்சி பயன்படுத்திக் கொள்கிறது. தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களையே நினைத்து வருத்தப்பட்டு அதன்மூலம் தன்னைத்தானே புகழ்பாடும் மனப்பான்மையை மதிக்க முடியாது. வேண்டுமென்றே இப்படி ஒருவர் வருந்தும் போக்கு வெறுப்பிற்குரியது. அதனால் உண்மையான துயரத்தையோ, தியாகம் செய்தவரின் கடும் மனத்துயரையோ புரிந்துகொள்ள ஒருவனால் இயலாது. மற்றவர்களின் துயரங்கள், மற்றவர்களின் வேதனைக் கதறல், மற்றவர்களின் மரண பயம் ஆகியவற்றை நம் நினைவில் தேடும் பழக்கத்தை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

– நிரபராதிகளின் காலம் நாடகத்தில்

# கடன்சுமையில் சிக்கவைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஐ.தே.க.உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை கடன் சுமையில் சிக்க வைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம்' நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டை கடன சுமையில் சிக்க வைத்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படக் கூடிய சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும்.

நாட்டை கடனில் சிக்க வைத்து தோல்வியடையும் தலைவர்கள் நாட்டுக்கு ஏற்படுத்திய அனர்த்தம் தொடர்பில் வழக்குத் தொடர வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கம் பாரியளவில் வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்றுக் கொண்டுள்ளது.

இதனால் பெருந் தொகைப்



பணத்தை வட்டியாக செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடன் மற்றும் வட்டியை செலுத்த அரசாங்கம் மக்கள் மீது வரிச் சுமையை திணிக்கின்றது. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் மக்களுக்கு நன்மை ஏற்படவில்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்கவே ஒப்புக்கொண்டுள்ளார். மெய்யான அபிவிருத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டது என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

# இறந்த நாகபாம்புக்கு சமயமுறைப்படி தகனம்

(கொழும்பு)

வாகன விபத்தில் சிக்கி பலியான ஆலய நாகப்பாம்பு சமய முறைப்படி பாலூற்றி, தகனம் செய்யப்பட்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை நிந்தவூரில் இடம்பெற்றது. நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, மாட்டுப்பழை மடத்தடி மீனாட்சியம்மன் ஆலயத்தில் நீண்டகாலமாக வசித்து வந்த நாகப்பாம்பு, இவ் ஆலயத்தின் சுற்றுப்புறச் சூழலை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கனரக இயந்திரத்தின் முன் பக்க சில்லில் சிக்குண்டு, உயிரிழந்துள்ளது.

இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்த இந்த நாகபாம்பை ஆலயத் தலைவர் கோ. கமலநாதன், அடியார் மகேந்திரன் ஆகியோர் வெண் சீலையில் கிடத்தி, சமய முறைப்படி பாலூற்றி பின்னர் தகனம் செய்தனர். நாக தோஷத்தை தவிர்ப்பதற்காகவே இதனைச் செய்ததாக இவர்கள் தெரிவித்தனர். இந்த நாகபாம்பு சுமார் 6 அடி நீளமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# அரசாங்க சேவையில் 5532 பேர் புதிதாக இணைப்பு

(கொழும்பு)

அரச சேவையில் புதிதாக 5532 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

இதன்படி அரச முகாமைத்துவ சேவைக்காக முகாமைத்துவ உதவியாளர் 4429 பேரும், இலங்கை பரிபாலன சேவைக்காக போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சைகளில் சித்தியடைந்த 230பேரும், 111ஆம் தர தொழில் நுட்ப அதிகாரிகளாக 640 பேரும் இவ்வாறு நியமனம் பெறவுள்ளனர்.

அவ்வாறே தேவையின் அடிப்படையில் மொழிபெயர்ப்பாளர்கள் 233 பேரும் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான நியமனங்கள் மேலும் சில மாதங்களில் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நிர்வாக சேவைக்கான திறந்தபோட்டிப் பரீட்சை

(கொழும்பு)

இலங்கை நிருவாக சேவை (SLAS) 111 ஆம் தரத்துக்கு தகுதியானோரை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் மற்றும் ஒக்டோபர் 4ஆம் திகதிகளில் கொழும்பில் மட்டும் நடைபெறும்.

இந்த பரீட்சைக்கு நாடுமுழுவதிலுமிருந்து 20,977பேர் தோற்றுகின்றனர் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

# இலஞ்சம் பெற்ற கான்ஸ்டபிளுக்கு ஒருவருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

பத்தாயிரம் ரூபா லஞ்சம் பெற்றுக்கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானங்களை கைப்பற்றி நீதிமன்றிற்கு குறைந்தளவு மதுபான போத்தல்களை முன்னிலைப்படுத்துவதற்காக கான்ஸ்டபிள் 10 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாரவில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது குறித்த நபர் இவ்வாறு லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளார். கடமையை உரிய முறையில் மேற்கொள்



ளத் தவறியமைக்காக நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

இலஞ்சம் பெற்றுக் கொண்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பத்தாண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட எட்டாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் குமுதினி விக்ரமசிங்க இந்த தண்டனையை நேற்றுமுன்தினம் விதித்துள்ளார். தண்டனைக்கு மேலதிகமாக 20,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# 12 இலட்சம் கிலோ உருளைக்கிழங்கு உள்ளூர்விவசாயிகளிடமிருந்து கொள்வனவு

## கூட்டுறவு வர்த்தக அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்' உள்ளூர் விவசாயிகளிடமிருந்து சுமார் 12 லட்சம் கிலோ உருளைக்கிழங்கை கொளவனவு செய்துள்ளது. இதற்காக ஒன்பது கோடி ரூபா செயலவிடப்பட்டிருப்பதாக கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தகம் தொடர்பான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நிர்ணய விலைக்கு விவசாயிகளிடமிருந்து உருளைக்கிழங்குகளை கொள்வனவு செய்ததன் மூலம் அவர்கள் கால தாமதமின்றி அவற்றை



விற்பனை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

உள்ளூர் விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் வெளிநாட்டிலிருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு, உள்ளூர் விவசாயிகளிடமிருந்தே அவற்றை கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்ததாகவும் இவ்வளவு பெருந்தொகையான உருளைக்கிழங்கை அமைச்சு கொள்வனவு செய்தமை இதுவே முதற்தடவையாகும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

எதிர்கட்சிகளின் போலி வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் ஜனாதிபதி உறுதி அளித்தவாறு உள்ளூர் விவசாயிகளினால் செய்கை பண்ணப்பட்ட அனைத்து உருளைக்கிழங்குகளையும் அமைச்சே கொள்வனவு செய்யும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

# இலங்கை - மாலைதீவு நாடுகளின் ஜனாதிபதிகளுக்கிடையே சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் மாலை தீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் கயூமுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது, சார்க் அமைப்பைத் தென்னாசிய மக்களுக்கு உகந்ததாக மாற்றுவது குறித்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் கயூமும் ஆராய்ந்துள்ளனர்.

மேலும் இரு தரப்பு உறவுகளை மேலும் விஸ்தரிப்பது, வலுப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை - மாலைதீவு கூட்டு ஆணைக்குழுவில் இணக்கம் காணப்பட்ட விடயங்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு இரு தலைவர்களும் இணங்கியுள்ளனர்.

காத்மண்டுவில் நடைபெறவுள்ள 18 ஆவது சார்க் உச்சிமாநாடு குறித்து கருத்து தெரிவித்துள்ள இரு தலைவர்களும், அந்த அமைப்பை பலப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராய்ந்துள்ளனர். மாலைதீவுக்கு சகல சாத்தியமான வழிகளிலும் உதவ இலங்கை தயார்ாக இருக்கிறது என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்த சந்திப்பின் போது மாலைதீவு ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் நடைபெறும் ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாட்டின் தொடர்ச்சியாக, இரு தலைவர்களும் சந்தித்து கலந்துரையாடினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெதுப்பக உற்பத்திகளின் விலையை குறைக்க ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள வெதுப்பகங்களுக்கு கோதுமை மா விநியோகம் செய்யும் நிறுவனங்கள், கோதுமை மாவின் விலையைக் குறைத்தால், வெதுப்ப கங்களில் உற்பத்தி செய்யப் படும் தீன்பண்டங்களின் விலையை குறைக்கலாம் என்று இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் மற்றும் மின்சார கட்டணங்களில் குறைப்பு ஏற்பட்டிருப்பதனால், கோதுமை மா விநியோகம் செய்யும் நிறுவனங்களுக்கு நல்ல ஆதர்யம் கிடைக்கும்.

அதனால் அந்நிறுவனங்கள் கோதுமை மாவின் விலையை குறைத்தால் எமது உற்பத்திப் பண்டங்களின் விலையையும்



நாம் குறைக்க முடியும் என்று இலங்கை வெதுப் பக உரிமையாளர்தள் சங்கப் பேச்சாளர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

மேலும் வெதுப்பக உற்பத்தி பண்டங்களின் மீதான 15 வீத வரியினையும் பாணின் மீதான 2 வீத வரியினையும் அரசாங்கம் குறைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

16) அதிகளவில் மகிழ்ச்சியாக உள்ளவர் யார்?
(i) சமன் (ii) கமால் (iii) நசீர்

17) அதிகளவில் துக்கமாக காணப்படுபவர் யார்?
(i) சுமன் (ii) சமன் (iii) ரமணன்

18) இயல்பாக உள்ளவர் யார்?
(i) சமன் (ii) சுமன் (iii) கமால்

19) எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான இயல்பு
(i) உணவு உண்ணல் (ii) ஆடை அணிதல் (iii) சிரித்தல்

20) ஆடு, மாடு → கால்நடை : மண்ணெண்ணெய், பெற்றோல் → .....................
(i) வாகனம் (ii) லீற்றர் (iii) எரிபொருள்

- **கீழுள்ள பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

அலகும் காலும் செந்நிறமாய்
அமைந்து விளங்கும் காரணமென்
அருந்தக் கனிகள் தந்திடுவோம்
அன்பாய் நீயும் மொழிவாயே

21) இப்பாடல் எதனை நோக்கிப் பாடப்பட்டது?
(i) தாரா (ii) கிளி (iii) மரங்கொத்தி

22) மொழிவாயே என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(i) கூறுவாயே (ii) செய்வாயே (iii) தருவாயே

23) செந்நிறமாய் என்பதை பிரித்தெழுதினால்.
(i) செ + நிறமாய் (ii) செந் + நிறமாய் (iii) செம்மை + நிறமாய்

- **பின்வரும் எழுத்துக்களையும் எண்களையும் அவதானித்து விடை தருக**

6 J S 7 2 K U 4 3 4 6 J 2 P 2 4 3 4 U K

24) இக்கூட்டில் அதிகமாகக் காணப்படுவது
(i) எழுத்துக்கள் (ii) எண்கள் (iii) கூறமுடியாது

25) எண்களின் இரு பக்கமும் எழுத்துக்கள் அமைந்திருக்கும் சந்தர்ப்பங்கள்
(i) 1 (ii) 2 (iii) 3

26) ஒரே ஒரு தடைவ மட்டும் வந்துள்ள ஆங்கில எழுத்து
(i) U (ii) S (iii) T

- **கீழே தரப்பட்ட வினாக்களில் முதலில் உள்ள எண் பெறுமானத்திற்குப் பதிலாக ஈடுபடுத்தக் கூடிய எண் கூட்டத்தை தெரிவு செய்து கோடிடுக.**

27) IX + V = (1) X - VI (2) X + IV (3) VIII + V

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்**




**தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015**

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



01) இங்குள்ள போக்குவரத்துச் சாதனங்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



(அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ)

இக்கூட்டங்களை சரியாகக் காட்டும் விடைத்தொகுதி

(1) அ, ஆ / இ, ஈ / உ, ஊ
(2) ஈ, ஊ / அ, உ / ஆ, இ
(3) அ, ஈ / உ, அ / இ, ஊ

2) இங்குள்ள காய்கறி வகைகளை மூன்று கூட்டங்களாக வகைப்படுத்தலாம்.



(அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ)

(1) அ, ஆ / இ, ஈ / உ, ஊ
(2) அ, உ / ஆ, ஈ / இ, ஊ
(3) அ, ஈ / இ, ஊ / ஆ, உ

3) கீழே தரப்பட்ட உருக்களில் கருத்துடனும் பொருத்தமானதுவுமான உருவை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
கூரிய கண்பார்வையுடையது.



(1) (2) (3)

4) சுறுசுறுப்பானது, உணவைச் சேமித்துவைக்கும்; சமுதாயமாக வாழும்



(1). (2) (3)

- 5ஆம், 6ஆம் வினாக்களில் சரியான விடையைத் தெரிவுசெய்யுங்கள்

5. படத்தில் உள்ளவர்.



1. கொங்காலேகொட பண்டா.
2. கப்பெட்டிபொல திசாவை.
3. கலாநிதி ஆநந்தக்குமாரசாமி.

6. இப்படத்தில் உள்ள இலட்சினை குறிப்பது.



1. இலங்கை மின்சாரசபை.
2. தேசிய கல்வி நிறுவகம்.
3. யூனிசெவ் நிறுவனம்.

- 7ஆம், 8ஆம் வினாக்களுக்கான சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

7) கிணற்றில் உள்ள நீரை அள்ள கப்பியும் துணியை வெட்ட கத்திரிக்கோலும் பயன்படுத்தக் காரணம்.

(i) அவை இரும்பினால் ஆக்கப்பட்டுள்ளமை
(ii) வேலையை இலகுவாக்கலாம் என்பதால்
(iii) வேறு வழி இல்லாமையினால் ஆகும்.

8) கங்காரு என்னும் விலங்கினத்தின் பின்னங்கால்கள் நீண்டிருப்பதற்கான காரணம்.

(i) வேகமாக ஓடுவதற்கு
(ii) நடந்து செல்ல வசதியாக
(iii) உணவு உண்பதற்கு ஏற்றதாக

- கீழ் காணும் தகவல்களை ஒழுங்கமைத்து சரியான விடையின் கீழ் கோடிடுக.

9)
1. தேயிலை சாயம் கலக்க வேண்டும்
2. தரமான பால், தேநீர் தயார்
3. தண்ணீரைக் கொதிக்க வைக்க வேண்டும்
4. சீனி, பால்மா சேர்த்து கரைக்க வேண்டும்.


(1) 3, 2, 1, 4 (2) 3, 1, 4, 2 (3) 2, 1, 3, 4




10)
1. பயணச் சீட்டுப் பெறுதல்
2. பொதிகளை இருக்கையின் மேல் வைத்தல்
3. புகையிரத நிலையம் செல்லுதல்
4. ஆசனத்தில் அமருதல்

(1) 4, 2, 3, 1 (2) 3, 2, 1, 4 (3) 3, 1, 2, 4

11) கீழே உள்ள கோட்டுப் படத்தில் அடுத்து வரும் உரு?




12)




- அடிக்கோடிடப்பட்டுள்ள தடித்த சொற்களுக்கு பொருத்தமான பதத்தைக் கொண்ட சோடியைத் தெரிவு செய்து அதன் கீழ் கேடிடுக.


13) வைத்திய **நிபுணர்** நோயாளிக்கு **ஆலோசனை** கூறினார்

(1) சித்தி, சிறப்பு (2) பிரசித்தி, புத்திமதி (3) அறிஞர், அறிவுரை

14) திலீபனின் **திறமை** பரீட்சைப் **பெறுபேற்றில்** தெரிந்தது.

(1) சித்தி, சிறப்பு (2) ஆற்றல், முடிவு (3) வல்லமை, குறிப்பேடு

15) கீழுள்ள உருவில் ⟶ காட்டும் பெட்டிக்குப் பொருத்தமான எண்.





1) 6. 4, 0, 9
2) 4, 6, 0, 9
3) 6, 4, 9, 0

- குறிப்பிட்ட ஒரு நாளின் 3 வேளைகளில் 5 பிள்ளைகளின் முக பாவனை கீழே உள்ள கோட்டுப் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

| | நசீர் | சுமன் | கமால் | ரமணன் | சமன் |
|---|---|---|---|---|---|
| காலை | ☺ | ☹ | ☺ | 😐 | 😐 |
| மதியம் | ☺ | ☹ | ☹ | ☺ | 😐 |
| மாலை | ☺ | 😐 | 😐 | ☺ | 😐 |

☺ மகிழ்ச்சி
😐 சாதாரணம்
☹ துக்கம்





வடக்கில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் படையணியினருக்கான பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வு நேற்று காங்கேசன்துறையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அம்பம்பொல படையணியினரின் அணிவகுப்பை ஏற்றுக்கொள்வதையும் பயிற்சி பெற்ற படையணியினரின் பெற்றோருக்கான பாராட்டு சான்றிதழை வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் வழங்குவதையும் இராணுவத்தினரின் சாகச நிகழ்வையும் காணலாம்.

(படங்கள் : பார்த்தீபன்)

# பாடசாலை செல்லாத மாணவர்களின் விபரங்களை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

வலி.மேற்கில் பாடசாலை செல்லாத மாணவர்களது விபரங்கள் திரட்டப்பட்டு அவர்களை பாடசாலைக்கு அனுப்ப அனைத்து தரப்பினரும் கூடுதல் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

எந்தவொரு சிறுவர்களும், வளர்ந்தவர்களும் காரணமின்றி பாடசாலை செல்லாது இருக்க முடியாது.

இது விடயத்தில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமென வலி.மேற்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் வ.சிவகுமார் அறிவுறுத்தல் வழங்கியுளளார்.

வலி.மேற்கு . சிறுவர் அபிவிருத்தி கூட்டம் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பாடசாலைக்கு செல்லாத சிறுவர்களின் நிலை தொடர்பாக கிராம அதிகாரிகள், நன்னடத்தை அதிகாரிகள், சமுர்த்தி அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர்.

குறிப்பாக வலி.மேற்கில கல்விளான் காட்டுப்புலம் மற்றும் இதர கிராம அலுவலர் பிரிவுகளில் இந்நிலை தொடர்வதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்தே உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அதிகாரிகளுக்கு பாடசாலை செல்லாத சிறுவர் நிலை குறித்தும், இதனால் எதிர்காலத்தில் எற்படப்போகும் ஆபத்து குறித்தும் விளக்கியதுடன் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களின் விபரங்களை உடன் தரும்பட்சத்தில் உச்சகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

அத்துடன் தனியார் நெட் கபே (net cafe) கடைகளின் செயற்பாடு குறித்தும் திடீர் பரிசோதனை மூலம் ஆய்வு செயய திட்டமிடல் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதேச செயலக உயரதிகாரி தெரிவித்தார். (92)

# சேதமடைந்துள்ள வீதி சிரமத்தில் போக்குவரத்து

(சுன்னாகம்)

நவாலி அரசடி கொத்துக் கட்டி ஊடான அராலிக்கு சென்று வீதி மிகமோசமாக சேதமடைந்துள்ளதால் பயணம் செய்ய முடியாத அவல நிலை தோன்றியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நவாலி அரசடிச் சந்தியில் இருந்து கொத்துக்கட்டியூடாக அராலி வரை செல்லும் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரமான இவ்வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதோடு கற்கள் கிழறுண்டு வீதி சீரற்ற நிலையில் காணப்படுவதால் மக்கள் நடந்து செல்வது கூட மிகச் சிரமமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வீதியால் வாகனங்கள் எவையும் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கும் மக்கள் சம்மந்தப்பட்டவர்கள் குறித்த வீதியை புனரமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)

# மார்பக புற்றுநோய் முன்னோடி பரிசோதனை

பெண்களுக்கான மார்பக மற்றும் கர்ப்பப்பை புற்று நோய்களைக் கண்டறிவதற்கான முனனோடி பரிசோதனை நேற்று முன்தினம் . மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் சனத்தொகை சேவைகள் லங்கா (பி.எஸ்.எல்) நிறுவனத்தில் அதன் மாவட்ட. இணைப்பாளர் எம்.ஐ.ஏ.ரசாக் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு குறித்த மார்பக மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய்களை கண்டறிவதற்கான முன்னோடி பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன.



குறித்த பரிசோதனையின் போது பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிகள் கொழும்பு தேசிய புற்றுநோய் பணியகத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக, மன்னார் சனத்தொகை சேவைகள் லங்கா (பி.எஸ்.எல்) நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் எம்.ஐ.ஏ.ரசாக் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் அதிதிகளாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஆர்.யூட், சனத்தொகை சேவைகள் லங்கா (பி.எஸ்.எல்) நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் டாக்டர். அஜித் மெண்டிஸ், தேசிய புற்றுநோய் பணியகத்தின் வைத்தியர் ஏ.எஸ். அனுஸாந்தன், மாவட்ட உதவிச்செயலாளர் என். பரமதாஸ், மடு - உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.டி.சந்திரபால, மாவட்ட உளநல வைத்தியர் டாக்டர். சுகந்தி கலைச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு அதிகாரிகள் குழு விஜயம்



கரவெட்டி பிரதேச செயலகத்தின் நிர்வாக செயற்பாடுகளை பார்வையிடுவதற்காக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார் மற்றும் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்டனர்.

கரவெட்டி பிரதேச செயலகத்தின் நிர்வாக செயற்பாடுகள் திறமையாக இருப்பதை அடுத்து அதிகாரிகள் குழுவினர் செயலகத்திற்கு வருகை தந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வருகைதந்த அதிகாரிகள் குழுவினர் பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ மற்றும் செயலக உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினர். (18)

# அபராதம் விதிப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை நீதிமன்றில நீதிமன்ற நடவடிக்கையில் குழப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொண்ட நான்கு பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பருத்தித்துறை பகுதியில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு காரணமாக இருந்த 4 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நான்கு பேருக்கு நீதிமன்ற பதில் நீதிபதி தலா ஆயிரம் ரூபா வீதம் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (18)

# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சனீஸ்வர விரத வழிபாடு

சனீஸ்வரனுக்குரிய புரட்டாதிச் சனி விரதம் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

முல்லை மாவட்டத்தில் பழமை வாய்ந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இப் பகுதி மக்களினால் சனீஸ்வரனுடைய தோஷம் நீங்குவதற்காக சிவனாலயத்துக்கு சென்று எள்ளும் பொட்டாளியும் எரிக்கும் இவ் விரதம் இந்துக்களினால் அனுஷ்டித்து வருவது வழமை.

இந்த ஆண்டும் வெகு சிறப்பாக ஆலய பிரதம குருக்கள் சனாதன சர்மாவினால் சிறப்பான பூசைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)


# வலயமட்ட கண்காட்சி

வடமராட்சி வலயத்தால் நடத்தப்படும் வலய மட்டக் கணகாட்சி நாளை திங்கட்கிழமை மற்றும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நெல்லியடி மத்திய கலலூரியில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராசாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட கண்காட்சிப் பொருட்கள் ஒவ்வொரு பாடரீதியாக காட்சிப்படுத்தப்படவுள்ளன. (18)

# ஆஸி. நாடாளுமன்றத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அச்சுறுத்தல்



மும்பை பயங்கரவாத தாக்குதல் பாணியில் அவுஸ்ரேலிய நாடாளுமன்றத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அச்சுறுத்தல் இருந்ததாகவும், அதையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் முக்கிய தலைவர்களைக் குறிவைக் கும் வகையில் அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். திட்டம் தீட்டியிருப்பதாகவும் இது குறித்து அவுஸ்ரேலிய அரசை அந்நாட்டு உளவுத் துறை உஷார்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் பாணியை ஐ.எஸ்.ஐ.எஸ். பின்பற்ற முடிவு செய்திருந்ததாக அவுஸ்ரேலிய உளவுத் துறை தெரிவித்துள்ளது. உளவுத்துறையின் எச்சரிக்கையை அடுத்து, அவுஸ்ரேலிய நாடாளுமன்றம், முக்கிய வீதிகள், வர்த்தக நிறுவனங்கள், விமான நிலையங்கள் என அனைத்து இடங்களிலும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும், சதித் திட்டம் முறியடிக்கப்பட்டதாகவும் அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அபாட், "நாடாளுமன்றம் நமது கட்டுப்பாட்டில் உள்ளது. அனைத்து பக்கங்களிலும் வளாகத்தின் உள்ளேயும் தீவிர பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன நமது நாடாளுமன்றத்துக்கு வந்த மிரட்டலை அடுத்து அனைத்து வகையிலும் உச்சக்கட்டப் பாதுகாப்புக்கும் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். அதுமட்டுமன்றி அவுஸ்ரேலிய மக்களின் பாதுகாப்புக்கே இங்கு முதல் உரிமை என்றார்.

# இந்தியாவின் புதிய தூதுவராக ரிச்சர்டு வர்மா நியமனம்



இந்திய - அமெரிக்கரான ரிச்சர்டு ராகுல் வர்மாவை (வயது 45) இந்தியாவுக்கான புதிய அமெரிக்க தூதராக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா நியமித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அடுத்த வாரம் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் இந்தியர் ஒருவரை இந்தப் பதவிக்கு நியமனம் செய்திருப்பதுடன் இந்த நியமனத்துக்கு அந் நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கினால் இந்தப் பதவியை வகிக்கும் முதல் இந்திய - அமெரிக்கர் என்ற பெருமை வர்மாவுக்கு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் ஒபாமா மற்றும் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஆகியோருக்கு மிகவும் நெருக்கமானவராக கருதப்படும் வர்மா இப்போது ஸ்டெப்டோ அண்ட் ஜான்சன் எல்.எல்.பி மற்றும் அல்பிரைட் ஸ்டோன் பிரிட்ஜ் குழுமம் ஆகியவற்றில் ஆலோசகராக விளங்குகிறார்.

இதற்கு முன்பு அமெரிக்க வெளியுறவுத் துறையின் சட்ட விவகாரங்களுக்கான துணை செயலாளராகவும் (2009 - 2011) இவர் பணியாற்றியுள்ளதுடன் முதுநிலை தேசிய பாதுகாப்பு ஆலோசகர், செனட் பெரும் பான்மை தலைவர் ஹாரி ரீட் என்பவரின் ஆலோசகர் மற்றும் வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளவர் வர்மா என்பது குறிப்பிடத்தக்கது.

# சீன இராணுவ ஊடுருவல் இந்திய எல்லையில் நீடிப்பு

சீன அதிபர் ஜி ஜின்பங் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது இந்திய எல்லைக்குள் லடாக் பகுதிக்குள் சீன இராணுவ வீரர்கள் 1000 பேர் சமீபத்தில் ஊடுருவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதன்போது சீன அதிபரிடம் சீன படையினரின் ஊடுருவல் பற்றி பிரதமர் மோடி பேச்சு நடத்தியதற்கு எல்லையில் ஊடுருவல் இருக்காது என்று அவர் உறுதியளித்து இருந்தார்.

ஆனால் இந்திய எல்லைக்குள் ஊடுருவிய சீன இராணுவ வீரர்கள் இன்னும் அங்கிருந்து வெளியேறவில்லை எனவும் தொடர்ந்து ஊடுருவலில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து அந்தப் பகுதிக்கு இந்திய இராணுவம் 1,500 வீரர்களை அனுப்பி உள்ளது.

மேலும் இரு தரப்புக்கும் இடையே எல்லையில் சமாதான கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. எதிர் எதிர் திசையில் வீரர்கள் நிறுத்தப்பட்டு கண்காணித்து வருகிறார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

உலகச் செய்திகள்

# உயிருடன் புதைத்த குழந்தைக்கு வழிபாடு செய்தனர் பெற்றோர்



தமது மகளுக்கு தெய்வ அருள் இருப்பதாகவும், உயிருடன் புதைத்தால் சரியாகிவிடும் என்றும்கருதி இரண்டரை வயது சிறுமியை உயிருடன் புதைத்த பெற்றோர் அவளது சமாதிக்கு வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் ராஜஸ்தான் மாநிலம் பரத்பூர் மாவட்டம் கும்கெர் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் கும்கெர் கிராமத்தைச் சேர்ந்த வினோத் ஸ்ரீமதி ஆகிய இருவருக்கும் பிறந்த குஷ்பு என்ற ஒரேயொரு இரண்டரை வயது பெண் குழந்தையையே இவ்வாறு உயிருடன் புதைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

பிறந்ததில் இருந்து குஷ்பு உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தார். இதனால் சிறுமியை வைத்தியர்கள் மற்றும் மாந்தீரிகரிடம் அழைத்து சென்று சிகிச்சை அளித்து வந்தனர். அப்படி இருந்தும் உடல் நலம் சரியாகவில்லை.

இதனைத் தொடர்ந்து தங்களது மகளுக்கு தெய்வ அருள் இருப்பதாகவும், உயிருடன் புதைத்தால் சரியாகிவிடும் என்றும் அவர்கள் கருதி சிறுமி குஷ்புவை உயிரோடு புதைத்தனர். அதோடு அவர் புதைக்கப்பட்ட இடத்தில் வழிபாடுகளையும் செய்துள்ளனர்.

அந்த பகுதியை சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் அங்கு குவிந்து சிறுமி புதைக்கப்பட்ட இடத்தில் வழிபாடு செய்துள்ளனர். அவர்கள் பழங்கள், பூக்கள், பணங்களை வைத்து பிரார்த்தனை செய்ததால் அந்த கிராமம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்த பொலிஸார் அங்கு வந்து சிறுமி புதைக்கப்பட்ட இடத்தை தோண்டி உடலை எடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் அந்த சிறுமி கடும்மையான வயிற்று போக்கால் பாதிக்கப்பட்டு இருந்தது தெரியவந்தது. இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறனர்.

# கார் வெடிகுண்டுத் தாக்குதல் பாக்தாத்தில் 20 பேர் பலி



ஈராக்கிலும், சிரியாவிலும் கைப்பற்றும் பகுதிகளில் இஸ்லாமிய ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற நோக்கில் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டுவரும் ஜிஹாதிப் போராளிகளின் தாக்குதலை முறியடிக்க அமெரிக்கா தலைமையில் உலக நாடுகள் ஏவுகணைத் தாக்குதல்களை ஆரம்பிததுள்ளன. இருப்பினும் தொடர்ந்து நேற்று இரண்டாவது நாளாக அங்கு தொடர் கார் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மத்திய பாக்தாத்தில் உள்ள ஷியா பெரும்பான்மையைக் கொண்ட கர்ரடா மாவட்டத்தில் உள்ள அல்-முபாரக் மசூதியின் அருகே வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் ஒன்று நேற்று வெடித்ததில் 8 பேர் பலியானதாகவும், 18 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்பின்னர் நஹ்ரவன் என்ற இடத்தில் உள்ள ஷியா புறநகர்ப் பகுதியிலும், பயா என்னும் ஷியா பிரிவு மாவட்டத்திலும் இரண்டு கார் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதில் 9 பேர் பலியானதாகவும், 23பேர் காயமடைந்துள்ளதாகவும தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவைதவிர பாக்தாத்தின் தெறகுப் பகுதியில் உள்ள மஹ்மூதியா என்ற நகரப்பகுதியின் வாகனங்கள் நிறுத்தும் பகுதியில் ஒரு கார் வெடிகுண்டு வெடித்ததில் 3 பேர் பலியானதுடன் 10 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிணைக் கைதிகள் 49பேர் விடுவிப்பு

துருக்கி தூதரகத்திலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட 49 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டதாக அந்நாட்டு பிரதமர் அகமது டவுடோக்லு தெரிவித்தார்.

கடந்த ஜூன் 11-ஆம் திகதி ஈராக்கின் மொசூல் நகரை ஐ.எஸ்.ஐ.எஸ். கைப்பற்றியபோது, துருக்கி துணை தூதரகத்தை தாக்கி அங்கிருந்த ஊழியர்களைக் கடத்தி சென்றனர்.

இந்த நிலையில் பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 49 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டு சனிக்கிழமை அன்று நாடு திரும்பியதாக துருக்கி பிரதமர் அகமது டவுடோக்லு அறிவித்தார்.

# கனடாவை சூழும் உறைபனி

(ரொரன்றோ)

கனடாவின் தென்பகுதிகளில் உறைபனி சூளும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வானிலை மைய ஆய்வாளர் ஜியோவ் கோல்சன் கூறியதாவது, கடந்த வியாழக்கிழமை இரவு ஒட்டாவா பள்ளத்தாக்கு முதல் ரொறொன்ரோ வடக்கு பகுதிகள் மற்றும் ஒன்ராறியோவின் வடகிழக்குப் பகுதிகள் ஆகிய இடங்களுக்கு இந்த உறைப்னி எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது. ஒட்டாவா பகுதியில் இரவு முழுவதும் வெப்பநிலை 0 பாகை செல்சியஸாக இருக்கும். ஆனால் இதில் ரொறன்ரோ சற்று தப்பிக்க வாய்ப்புள்ளது.

எனவே குறிப்பிட்ட இடங்களை சேர்ந்த பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# அறிவாயுதம் ஏந்துவோரின் பாதையில் மக்கள் அழைத்துச் செல்லப்படவேண்டும்

## சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் தெரிவிப்பு



அழிவாயுதங்கள் நடத்திய அவலங்களை படிப்பினையாகக் கொண்டு இனி அறிவாயுதத்தை இளைஞர்கள் ஏந்த வரவேண்டும் என்று கொக்குவில் பொற்பதியில் நடைபெற்ற நல்லூர்த் தொகுதியின் இளைஞர் அணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச முக்கியஸ்தர் எஸ்.விந்தன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் மாயமான்களைப் பின் தொடர்ந்து ஓடி எமது மக்கள் அம்புபட்டு அழிந்த அவலங்கள் இனியும் வேண்டாம். அறிவாயுதத்தை ஏந்துவோர் வழிநடத்தும் பாதையில் எமது மக்களை அழைத்துச் செல்ல இளைஞர்கள் விழித்தெழுந்து வரவேண்டும்.

உலக உருண்டை எங்கும் நடந்து முடிந்த உரிமைப் போராட்டங்கள் யாவும் வெற்றிபெற்றிருக்கின்றன. தீர்வைத்தந்திருக்கின்றன. ஆனாலும் எமது மக்களின் உரிமைப்போராட்டம் மட்டும் இத்தனை அவலங்களுக்குப் பின்னரும் தீர்வின்றிச் செல்வதற்கு யார் காரணம்? அரசியல் தீர்வுக்கு அடுத்தவர்களே தடையென்று சுட்டுவிரலை நீட்டும்பொழுது ஏனைய நான்கு விரல்களும் அவர்களை நோக்கியே நீள்கின்றன. வடமாகாண சபையின் அதிகாரங்களை பெற்றுக் கொண்ட பின்னரும் அதை நடைமுறைப் படுத்த அரசாங்கமே தடை என்று நொண்டிச்சாட்டுக் கூறிவருகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அரசியல் தீர்வுக்கு தடையானவர்கள் அடுத்தவர்கள் அல்ல என்பதை உணர்ந்து கொள்ள இது ஒன்றே போதும்.

தாம் உல்லாசமாக குளிரூட்டப்பட்ட ஆடம்பர வாகனங்களை பெறுவதற்கு அரசாங்கம் தடையில்லையென்றால் வடமாகாண சபையை இயக்குவதற்கு அரசாங்கம் எவ்வாறு தடையாக இருக்க முடியும்? எந்த ஆளுநர் வடமாகாண சபையை இயக்கத் தடையாக இருக்கின்றார் என்று கூறுகின்றார்களோ அதே ஆளுநரிடமிருந்து தான் சொகுசு வாகனங்களைப் பெற்றிருக்கின்றார்கள். உங்களது சொந்தச் சலுகைகளை மட்டும் அரசிடம் இருந்து பல்லிழித்துப் பெறமுடியும் என்றால் தமிழ் மக்களுக்கான வடமாகாண சபையை அரசுடன் இணைந்து ஏன் இயக்க முடியாமல் இருக்கின்றது? பாவம் மக்கள். உங்கள் பசப்பு வார்த்தைகளை நம்பி வாக்களித்தவர்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றார்கள். வாக்குகளைச் சுருட்டிய நீங்கள் அடுத்த தேர்தலின் நாற்காலிகள் மீது கண்வைத்து காரியமாற்றுகிறீர்கள்.

வெற்று வீரப்பேச்சுக்கள் இலட்சிய வெற்றிகளுக்கு துணை வராது வெற்றறிக்கைகள் எதையும் பெற்றுத்தராது. இதை மக்களுக்கு உணர்த்த இளைஞர்கள் மாபெரும் சக்தியாகத் திரண்டு எழுந்துவரவேண்டும். மக்களை வழிநடத்தும் மகத்தான சக்தி இளைஞர் சக்திதான். ஒருகுரல் ஓசை எழுப்பாது. ஒருமித்த குரல்களே எல்லாச் செவிகளிலும் எட்டும். மாற்றங்களையும் இந்த மண்ணில் உருவாக்கும்.எனத் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதே இணைப்பாளர் ரவீந்திர தாசன், மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் றஜீவ் கல்விச் சமூகத்தினர் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### புலிகளின் சின்னம்...

நிகழ்விற்கு நடுவராக சென்றிருந்த எஸ். சதீஸ்குமார் என்ற கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட பயிற்றுநர் விடுதலைப்புலி களின் சின்னம் பொறிக்கப்பட்ட கழுத்துப் பட்டியை அணிந்து சென்றுள்ளார்.

இது தொடர்பில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் ஓட்டுசுட்டான் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து போட்டி நிகழ்விற்கு பொறுப்பான பணிப்பாளரின் அனுமதி பெற்றுபிரஸ்தாப பயிற்றுனரை ஓட்டுசுட்டான் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12)

### புலிகளின்...

டெட்டனேட்டர்களும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள் நீண்ட நாட்களாக பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஊவாமாகாண...

ளர்களை அச்சுறுத்தியதென 38 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக அந்த வலையமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே தேர்தல் வன்முறைச்சம்பவம் தொடர்பாக கபே அமைப்பிற்கு 77 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கபே தெரிவித்துள்ளது. துப்பாக்கிப் பிரயோகம், உள்ளிட்ட துப்பாக்கிகளை சட்டவிரோதமாக பயன்படுத்திய மூன்று சம்பவங்களும் உள்ளடங்குவதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

பொலிஸ் தலைமையக தகவலின்படி 11000பொலிஸாருடன் 1000சிறப்பு அதிரடிப்படைவீரர்களுடன் 500பேர் கொண்ட புலனாய்வுத்துறையினரும் நேற்றையதினம் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பதுளை, மற்றும் மொனராகல ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய ஊவாமாகாணத்தில் இரு போனஸ் ஆசனங்கள் உள்ளடங்கலாக 32 பேரை தெரிவு செய்ய 22அரசியல் கட்சிகள், 11சுயேட்சைக்குழுக்கள் சார்பாக 617வேட்பாளர்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியையின்..

குறித்த ஆசிரியர் விளையாட வேண்டாம் எனக் கூறியுள்ளார் இருப்பினும் தொடர்ந்து மாணவி சுக மாணவிகளுடன் விளையாடிக் கொண்டிருந்துள்ளார் இதனால் கோபமடைந்த ஆசிரியை மேசையில் இருந்த முதிரைப் பலகையினால் செய்யப்பட்ட பூவாசுவினால் மாணவியை நோக்கி எறிந்துள்ளார் இதன் போது இ.காவியா வயது பத்து என்ற மாணவியே தலையில் காயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த இ.காவியா எனும் குறித்த மாணவிக்கு தந்தை இல்லை மிகவும் வறிய குடும்பம் இந்த நிலையில் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் தாக்குதலை மேற்கொண்ட ஆசிரியை காவியாவை தான் பராமரிப்பதாக கூறி தனது வீட்டுக்கு அழைத்து வந்து பராமரித்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பலர் முன்னிலையில் காவியாவை தாக்கி காயப்படுத்திய ஆசிரியர் தனது வீட்டில் எவ்வாறு நடத்துவார் என்பது கேள்விக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தை குறித்த பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திக் குழு, மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றை தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்களும் சம்பவத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் சம்பவத்தை மூடி மறைக்கும் செயற்பாட்டில் பாடசாலைச் சமூகம் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதாவது காவியா குனிந்து எழும் போது மேசையில் மோதுண்டே காயமடைந்ததாக தெரிவிக்கும் படி சக மாணவர்களுக்கு ஆசிரியர்களால் அறிவிக்கப்பட்டுள்ளாகவும் கூறப்படுகிறது. (29)

### இலங்கை...

இவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர். இந்த விடயத்தை இருவரும் ஜனாதிபதியிடமும் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். இலங்கையில் நீண்ட காலமாக இழுபறியிலுள்ள பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்படவேண்டும் என்பதையே இந்தியாவிரும்புகிறது என்றும் அவர்கள் கூறினர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவித்தமைக்கு பாராட்டுத் தெரிவித்த அவர்கள், படகுகளை விடுவிக்குமாறும் கோரியுள்ளனர். இந்திய - இலங்கை மீனவர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையில் புதிய கடல்கொள்கை அவசியம் எனவும் அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். மீனவர் விவகாரம் ஒரு வாழ்வாதாரப் பிரச்சினையாகக் கருதப்பட வேண்டும். இலங்கை இந்த விடயத்தை உணர்பூர்வமாக அணுகுவதுடன் நெகிழ்ச்சித் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் ஜனாதிபதியைக் கோரினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இலங்கையில் இராணுவ...

இடம்பெறும் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்கப்படுவதாகவும், தொலைபேசிகள் மின்னஞ்சல்கள் உளவு பார்க்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரதான ஹோட்டல்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் புலனாய்வுப் பிரிவினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

யார் வருகின்றார்கள் யாரை சந்திக்கின்றார்கள் போன்ற தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமது வீட்டுக்கு நண்பர் ஒருவர் வந்தாலும் மறுநாள் அவரிடம் புலன்ாய்வுப் பிரிவினர். விசாரணை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். தமக்கு மட்டும் இந்த நிலைமை அல்ல எனவும், அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட அனைவருக்கும் இதே நிலைமை என அவர் தெரிவித்தள்ளார்.

இந்த அனைத்துக் காரணிகளையும் கருத்திற்கொண்டால் எதிர்காலத்தில் நாட்டில் இராணுவ ஆட்சி இடம்பெறக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் அரசாங்கத்தை தோற்கடிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி பேதங்களின் அடிப்படையில் செயற்படுவதற்கு உசிதமான நேரம் இதுவல்ல என அவர் எதிர்க்க்ட்சிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். நாட்டின் அனைத்து தரப்பினரும் பேதங்களை களைந்து ஒன்றிணைந்து இருண்ட எதிர்காலத்தை விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

### தமிழ்த்தலைமை....

கக்கூடிய அரசியல்வாதிகளின் கருத்துக்கு எடுபட்டு வாக்களிக்கவில்லை. ஆனால் இலங்கையில் எங்களது போராட்டத்தில் உண்மைத் தன்மை இருந்தபடியால் எங்களுக்கு போராட்டத்தின் பலனாக இலங்கை இந்திய ஒப்பந்தம் எனும் பொன்னான வாய்ப்புக் கிடைத்தது.

அதேவேளை ஸ்கொட்லாந்துக்கும் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்ததையும் நாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கடந்த காலத்தில் எமக்கு கிடைத்த அதிகாரத்தைக் கூட எமது தமிழ்த் தலைவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னர் எங்களுடைய ஆயுதப்போராட்டத்தைக் கையாண்ட விதத்தில் சரி, பிழைகள் இருக்கலாம். அதைப்பற்றி இப்போது விமர்சிக்க நான் விரும்பவில்லை.

ஆனால் எங்களுடைய காலகட்டத்தில் எமக்கு பல அனுபவங்கள் கிடைத்துள்ளன. அந்த அனுபவங்களை வைத்துக் கொண்டுதான் இவற்றைக் கூறுகின்றேன். பிரச்சினைகளையும் அவ்வாறே அணுக முற்படுகின்றேன். பிரச்சினைகளும் சூழலும் வேறுபட்டவை என்றவகையில் இங்கு தற்போது நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தைப்போல் இங்கு கூட அப்படியான ஒரு கோசத்தை முன்வைத்தால் மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. கடந்த காலத்தில் இலங்கை இந்திய ஒப்பந்த விடயத்தில் எமது தலைவர்கள் விட்ட தவறினால் எமது மக்கள் பல இழப்புக்களையும் துயரங்களையும் இடப்பெயர்வுகளையும் சந்திக்க வேண்டி வந்தது.

இன்று அவற்றிலிருந்து மக்கள் விடுபட்டுள்ள நிலையில் மீண்டும் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கே திரும்பியுள்ளோம். கடந்த காலமத்தைப் போல் இதையும் தவறவிடாமல் 13ஆவது திருத்தச் சட்டத்தை சரியாக அணுகுவோமாக இருந்தால் எமது பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணமுடியும் என்று நீண்டகாலமாக கூறிவருகின்றேன்.

முதலில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அதேவேளையில் சமகாலத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்தாலும் கூட்டுக்கட்சிகளின் அரசாகவே இருக்கின்றது. இருந்தாலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நாம் எமது பிரச்சனைகளை விவாதிக்கக்கூடிய தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

தளம் எதுவாக இருந்தாலும் எமது அணுகுமுறைகளும் முக்கியமாகும். நாங்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், தீராப்பிரச்சினையாக இருக்கவேண்டுமென்பதற்காக அணுகுவதற்கும் வேறுபாடுகள் உண்டு.

அண்மையில் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன், தீர்வுகள் காணப்படுவதற்கு தடையாக இருக்கக்கூடிய மூன்று காரணங்களை கூறியிருந்தார். ஒன்று, கிடைத்த் சந்தர்ப்பங்களை தவறவிட்டுவிட்டோம். இரண்டு, மக்களை உணர்ச்சிவசப்படுத்தி பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது. மூன்று, நடைமுறைச் சாத்தியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்று கூறியிருந்தார்.

இதை எமது அனுபவங்களிலிருந்து ஆரம்பம் முதல் நாங்கள் கூறிவருகின்றோம். நாங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண வேண்டும் என்று அணுகினால் தீர்வொன்றைக் காணமுடியும் என்பதே எமது அனுபவங்களுக்கூடாக கூறக்கூடிய நம்பிக்கையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சீனாவின் காலனி நாடாக விரைவில் மாறும் இலங்கை

## என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக சீனாவின் காலனி நாடாக விரைவில் இலங்கை மாறிவிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரதான நிர்மாணிப்பு அபிவிருத்தித் திட்டங்களில் பல திட்டங்களை 99 வருடங்களுக்கு சீனாவுக்கு குத்தகை அடிப்படையில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நகரின் நிர்மானப் பணிகள் பூர்த்தியடைந்த பின்னர், அந்த நிலப்பரப்பில் அரைவாசிக்கும் மேற்பட்ட நிலப்பகுதி குத்தகை அடிப்படையில் சீனாவுக்கு வழங்கப்பட உள்ளதுடன் மீதமுள்ள பகுதி மற்றுமொரு வெளிநாட்டு நிறுவனத்திற்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனாவிடம் கடன் பெற்று நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை எதிர்காலத்தில் சீனாவுக்கு வழங்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரசாங்கம் எடுத்து வரும் இந்த நடவடிக்கை இறுதியில் இலங்கை, சீனாவின் காலனி நாடாக மாறுவதில் முடிவடையும் எனவும் அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# ராஜினி திரணகமவின் நினைவுதினம் அனுஷ்டிப்பு





மனித உரிமைகள் மற்றும் பெண் உரிமைகளுக்கான செயற்பாட்டாளரான மறைந்த டொக்டர் ராஜினி திரணகமவின் 25ஆவது ஆண்டு நினைவுதினம் யாழ். ரிம்மர் மண்டபத்தில் நேற்று முற்பகல் ராஜினி திரணகம நினைவு ஏற்பாட்டுக் குழுவினரால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவுதின நிகழ்வில் தென்னிலங்கை உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து மூவின மக்களும் பெருமளவில் வந்து கலந்து கொண்டிருந்தார்கள். அமரர் ராஜினி திரணகம (ராஜினி ராஜசிங்கம் திரணகம) யாழ். பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீட உடற் கூறியல் விரிவுரையாளராகவும், அப்பிரி வின் தலைவராகவும் பணியாற்றியவர் என்பதுடன், உடற் கூறியல் துறையில் இங்கிலாந்தில் பட்டப்படிப்பையும் மேற்கொண்டவர்.

90 களில் வெளியிடப்பட்ட முறிந்த பனை என்கின்ற ஆங்கில நூலை எழுதியவர்களுள் ஒருவரான இவர், மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினை ஆரம்பித்தவர்களுள் ஒருவராவார்.

மனித உரிமைகள் மற்றும் பெண் விடுதலை தொடர்பிலான செயற்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட வருமாவார். (25)

# பண்டாரவளை மேயர் மீது தாக்குதல் சம்பவம்



(கொழும்பு)

தாக்குதலுக்குள்ளான பண்டாரவளை மாநகர மேயர் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இத்தாக்குதல் சம்பவம் பண்டாரவளை கெபில்லவெல என்ற இடத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை மாநகர மேயர் சமிந்த விஜயசிறிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதமே மோதலாக மாறியதாக தெரிவிக்கப்படுகிறது. இம் மோதலில் மேயர் உள்ளிட்ட மூன்று பேர் காயங்களுக்குள்ளாகினர்.

இச்சம்பவம் தொடர்பாக மேயர் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய முற்பட்ட போது அங்கும அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஐ.தே.க.வைச் சேர்ந்த பண்டாரவளை மேயர் ஐ.தே.க.வுக்கு ஆதரவு திரட்டுவதில் ஈடுபட்டிருந்தார். இதன் காரணமாகவே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது. பண்டாரவளை பொலிஸார் இது தொடர்பான விசாரணை களை மேற்கொண்டுள்ளார்கள். இது வரை எவரும் கைது செய் யப்படவில்லை.

# பனம் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும்

பனம் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும், விற்பனையும் இன்று உரும்பிராய் வடக்கு மீள் எழுச்சித்திட்ட மண்டபத்தில் இடம் பெறுகின்றது.

இன்று காலை 10.மணிக்கு ஆரம்பமாகும் இக்கண்காட்சி பொ.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம பித்து வைக்கவுள்ளதுடன் வலி. கிழக்குப் பிரதேச சபையின் எதிர்க கட்சித்தலைவர் இ. ஐங்கரன் கௌரவவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்.

# இருபிள்ளைகளுடன் கடலில் பாய்ந்து தாய் தற்கொலைக்கு முயற்சி

## பிள்ளைகள் இருவரும் பரிதாபகரமாக பலி

(திருகோணமலை)

திருகோணமலை அக்போபுரத்தைச் சேர்ந்த தாயொருவர் தனது இரு பிள்ளைகளுடன் கடலில் பாய்ந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதில் இரு பிள்ளைகளும் உயிரிழந்துள்ளதுடன் தாய் காப்பற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் திருக் கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அருகிலுள்ள கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

கடற்படையினர் தாய் மற்றும் இரண்டு பிள்ளைகளைக் காப் பாற்றி திருகோணமலை வைத்தியசாலையில் அனும தித்துள்ளனர். எனினும் சிகிச்சை பலனின்றி பிள்ளைகள் இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் 12 மற்றும் 14 வயதுடைய இரு பிள்ளைகளே பலியாகியுள்ளனர்.

உயிரிழந்த இரு பிள்ளைகளின் சடலங்களும் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கற்பாறைகளின் மேலிருந்து கடலை பார்த்து கொண்டிருந்த போது மகன் தவறி விழுந்து விட்டதாகவும் அவரை காப்பாற்றுவதற்கு முயன்ற போதே மகளும் கடலுக்கு விழுந்துவிட்டதாக அந்த பெண், பொலிஸாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

# மண்திட்டு சரிந்து வீழ்ந்து 4 இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

அம்பேபுஸ்ஸ சிங்ஹ படைப்பிரிவு தலைமையகத்தில் மண்வெட்டிக்கொண்டிருந்த படையினர் மீது மண்திட்டு சரிந்துவிழுந்ததில் நான்கு வீரர்கள் பலியாகியுள்ளனர்.

மண்திட்டு சரிந்து விழும் சந்தர்ப்பத்தில் அவ்விடத்தில் 13 இராணுவத்தினர் இருந்ததாகவும் அதில் ஒருவர் காயமடைந்து, வறக்காபொலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதையுண்டிருப்பதாக சந்தேகிக்கப்படுவோரை தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வீட்டுத்திட்ட நடைமுறையில் பணியாளர்களின் வற்புறுத்தலா?

## உடன் அறிவிக்க கோருகிறது ஹபிராட்

(கிளிநொச்சி)

வன்னியில் யு.என்.ஹபிராட் நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்டத்தில் குறித்த நிறுவன ஊழியர்களால் வீட்டுத்திட்டப் பணியாளர்களுக்கு வற்புறுத்தல்கள் எதுவும் விடுக்கப்படால் .அதுகுறித்து உடன் தெரியப்படுத்துமாறு நிறுவனத்தின் தேசிய திட்டமுகாமையாளர் ஹமீட் தெரிவித்துள்ளார்.

வன்னியில் யு.என்.ஹபிராட் நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீட்டுத்திட்டம் தொடர்பில் நிறுவனத்தின் உயரதிகாரிகளால் நேற்றைய தினம் கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்ட வேளையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடைப்பெற்ற இச்சந்திப்பில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் நிறுவனத்தின் உத்தியோகத்தகர்களின் தலையீடு அளவுக்கு அதிகமாகக் காணப்படுவது தொடர்பிலும்,குறித்த நிறுவனத்தின் தொழிநுட்ப உத்தியோக்த்தர்கள் வீட்டுத்திட்டப் பயனாளிகளிடம் தாங்கள் சிபார்சு செய்கின்ற விற்பனையாளர்களிடமே கட்டட பொருட்களைப் கொள்வனவு செய்ய வேண்டும் என வலியுருத்துவது,மற்றும் புள்ளியிடல் முறையில் காணப்படுகின்ற குறைபாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் கேட்கப்பட்டன

இதற்கு பதிலளித்த ஹமீட் யு.என். ஹபிராட் நிறுவனம் வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு நிறுவனம் மட்டுமே இந்திய அரசும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைப்பெற்ற ஒப்பந்தத்தின் படி ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியான வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனமாக மட்டுமே செயற்பட முடியும் ஏனைய எல்லா விடயங்களை அரச நிர்வாக கட்டமைப்பே மேற்கொள்ளும் முக்கியமாக பயனாளிகள் தெரிவில் எங்கள் நிறுவனத்தின் பங்குபற்றல் இருக்காது எனத்தெரிவித்த அவர்

நிறுவனத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பயனாளிகளிடம் தாங்கள் சிபார்சு செய்கின்ற விற்பனையாளர்களிடம் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும் என்று வலிறுத்தினால் அது முற்று முழுதாக தவறானது அவ்வாறு எமது நிறுவனத்தை சேர்ந்த எந்த தொழிநுட்ப உத்தியோகத்தர்களாவது செயற்பட்டால் வீட்டுத்திட்ட பயனாளிகள் நேரடியாகவே அல்லது பயனாளிகளிடம் வழங்கப்பட்டுள்ள கோவையில் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ தெரிவிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே இவ்வாறு செயற்பட்ட இரண்டு தொழிநுட்ப உத்தியோகத்தர்களை பதவி நீக்கம் செய்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்,யுஎன் ஹபிராட் நிறுவனத்தின் தலைமை நிபுணத்துவ அதிகாரி ரின் மக்நாயர். மாவட்டச் செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன், கரைச்சி பிரதேச செயலாளர் நாகேஸ்வரன்,உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (29)

# செந்தில் தொண்டமானிடம் நலம் விசாரிப்பு



(கொழும்பு)

பண்டாரவளை நகரில் இடம் பெற்ற இறுதி தேர்தல் பிரசாரத்தின் போது வாகன விபத்தில் காயமடைந்து கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் வேட்பாளர் செந்தில் தொண்டமானை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா நேரில் சென்று நலம் விசாரித்துள்ளனர்.

பண்டாரவளை நகரில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற இறுதி தேர்தல் பிரசாரத்தின் போது வேட்பாளர் செந்தில் தொண்டமானின் இணைப்புச் செயலாளரினால் செலுத்தப்பட்ட அவரது ஹமர் ரக வாகனத்தால் மோதுண்டு காயமடைந்த நிலையில் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.